# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆவணி 30 வியாழக்கிழமை (16-09-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 252


## பரந்தனில் படையினரின் 'அடித்து வீழ்த்தும் அலை!'

### புலிகளுடன் நேற்றுக் கடும் மோதல் வெடித்தது

வவுனியா, செப். 16

பரந்தன் பகுதியில் படையினர் ''ரலபஹர'' (அடித்து வீழ்த்தும் அலை) என்ற பெயரில் புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நேற்று ஆரம்பித்தனர்.

கனரக ஆயுதங்கள் ஹெலிக்கொப்டர்கள் சகிதம் பரந்தன் இராணுவ முகாமில் இருந்து விடுதலைப் புலிகளின் முன்னரங்க காவலரண்களை நோக்கி இவர்கள் நேற்று முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகளுடன் கடும்மோதல் மூண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போர்க்கோஷம்-5 இராணுவ நடவடிக்கை மூலம் மேற்கொள்ளப்பட்ட பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கை நேற்று முன்தினம் பூர்த்தி அடைந்ததாக அறிவிக்கப்பட்டகையோடு ''ரலபஹர'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'ரலபஹர' நடவடிக்கையின் போது ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (இ-9)

## இரு டாங்கிகள் பரந்தனில் சேதம்

கொழும்பு, செப். 16

பரந்தனில் படையினர் நேற்று ஆரம்பித்த 'ரலபஹர' இராணுவ நடவடிக்கையின் போது படையினரின் இரண்டு டாங்கிகள் சேதமடைந்தன.

பரந்தனில் படையினர் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்திருப்பதாகவும் இந்த நடவடிக்கையின் போது புலிகளின் முன்னரங்கக் காவலரண்கள் பல அழிக்கப்பட்டதாகவும் 21 புலிகள் வரை உயிரிழந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் சுனில் தென்னக்கோன் நேற்றுத் தெரிவித்தார்.

புலிகளின் தாக்குதலின் போது படையினரின் இரு டாங்கிகள் சிறிது சேதம்அடைந்தன என்றும் அவர் கூறினார். (இ)

## வவுனியாவில் 6 மின்மாற்றிகள் அகற்றப்பட்டன

வவுனியா, செப். 15

வவுனியா புறநகர்ப்பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த ஆறு மின்மாற்றிகள் நேற்றுக் காலை இலங்கை மின்சார சபையினரால் அகற்றப்பட்டன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர்கள் நேற்று கைது!

யாழ்ப்பாணம், செப். 16

கொக்குவில், இளவாலைப் பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்கள் நேற்றுப் படையினரால் கைதுசெய்யப்பட்டனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்

[10 ஆம் பக்கம் பார்க்க]

# புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று கிபிர் குண்டு வீச்சு!

## 3 ஊர்காவலர் சடலமாக மீட்பு

கொழும்பு, செப். 16

மகாஓயாப்பகுதியில் உள்ள பேரவெல்தலாவ காட்டுப் பகுதியில் வேட்டைக்குச் சென்ற 3 ஊர்காவல்படையினரும் பொதுமகன் ஒருவரும் சடலமாக மீட்கப்பட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



கருத்துக் கணிப்பு முடிவுகளே குலை நடுக்கத்தைக் கொண்டு வரப்போகுது பாருங்கோ......!

## 22 பேர் பலி, 41 பேர் காயம் எனத் தெரிவிப்பு

வவுனியா, செப்ரெம்பர் 16

முல்லைத்தீவு மாவட்டம் — புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள சந்தை ஒன்றின் மீது கிபிர் விமானங்கள் நேற்றுக் காலை நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட 22 பொதுமக்கள் உடல் சிதறிப் பலியாகினர் என்றும் 41 பேர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தையில் பொதுமக்கள் பலர் கூடியிருந்த வேளையில் ிந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக ''புலிகளின்குரல்'' வானொலி நேற்றிரவு தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தூரதர்ஷன் நடத்திய

## கருத்துக் கணிப்பில் பி. ஜே. பிக்கு சாதகம்!

சென்னை, செப் 16

இம்மாதம் 5 ஆம், 11 ஆம் திகதிகளில் இந்தியாவில் வாக்களிப்பு நடைபெற்று முடிந்த 268 தொகுதிகளில் அதிக தொகுதிகளில் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியே வெற்றி பெறும் என தூரதர்ஷனின் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 268 தொகுதிகளில் 145 தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணியும் 105 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சியும் வெல்லும் என்றும் ஏனைய கட்சிகள் 18 தொகுதிகளில் வெல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜபக்ஷ செவ்வாயன்று யாழ். அழைத்துவரப்படுவார்

யாழ்ப்பாணம், செப். 16

கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுகொலைவழக்கில்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவ கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவார்,

யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் இதற்கான உத்தரவை நேற்று சிறைச்சாலை ஆணையாளருக்கு விடுத்தார்.

செம்மணி உப்பளப் பகுதியில் சுமார் 20 பேரினது உடல்கள் ஒன்றாகப் போட்டு மூடப்பட்ட புதைகுழிகள் இருப்பதாக ராஜபக்ஷ முன்னர் தெரிவித்திருந்தார். அந்த இடத்தை அவர் அடையாளம் காட்டியும் இருந்தார்.

அந்தப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை தோண்டுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது அங்கு சடலங்களோ அல்லது எச்சங்களோ மீட்கப்படவில்லை.

புதைகுழிகள் தொடர்பாக மேலும் விவரங்களைப் பெறவே ராஜபக்ஷ மீண்டும் கொழும்பில் இருந்து அழைத்து வரப்பட இருக்கிறார். (இ-6)

## 473 பேர் இன்று வன்னிக்கு

கொழும்பு, செப். 16

வவுனியாவிலிருந்து இன்று வியாழக்கிழமை 473 பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வன்னிப் பகுதிக்குச் செல்லவுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வவுனியாவிலிருந்து பஸ்கள் மூலம் வன்னிக்கு ஏற்றிச் செல்லப்படுவார்கள்.

இவர்களை ஏற்றிச் செல்லும் பஸ்கள் வவுனியா கச்சேரியிலிருந்து காலை 7.00 மணிக்குப் புறப்படும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் முகாமில் 12 பேர் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், செப். 16

காங்கேசன்துறைதடுப்பு முகாமில் 9 ஆண்களும் 3 பெண்களுமாக 12 பேர் தற்பொழுது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்என்று தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி சட்டத்தரணி என். ஜீவேஸ்வரா நேற்று இந்த முகாமுக்கு விஜயம் செய்து மேற்படி கைதிகளைப் பார்வையிட்டார்.

கைதிகளுக்கு உறவினர்களினால் வழங்கப்பட்ட கடிதங்கள் மற்றும் உணவுப் பொருள்களைக்கையளித்ததுடன்அவர்களின்சேமநலன் பற்றியும் அவர் கேட்டறிந்துகொண்டார்.

இந்த முகாமில் சுப்பிரமணியம் சிறீகரன் (வயது 25, இளையவள் குடியிருப்பு, நாச்சிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எலும்போ, எச்சங்களோ நேற்று மீட்கப்படவில்லை!

### இன்றும் தோண்டும் பணி தொடரும்

யாழ்ப்பாணம், செப். 16

செம்மணி கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளிகளில் ஒருவரான டி. எம். ஜெயதிலக அடையாளம் காட்டிய பகுதியில் புதை குழி தோண்டும் பணி நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணியில் மிதிவெடி

யாழ்ப்பாணம், செப். 16

செம்மணிப் பகுதியில் நேற்று புதைகுழி தோண்டப்பட்ட இடத்துக்கு சமீபமாக காப்பரணுக்கு வெளியே நேற்று மாடு ஒன்று மிதிவெடியில் காலை இழந்தது.

புதைகுழி தோண்டும் பணி மும்முரமாக நடைபெற்றுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப் பேசிய கூட்டத்தில் கல் வீச்சு! குழப்பம்!!

### பொலீஸ் துப்பாக்கிச்சூடு

மட்டக்களப்பு, செப். 16

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் இரவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 பொதுமக்கள் காயமடைந்தனர்.

அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் உட்பட பிரமுகர்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பனையிலிருந்து விழுந்து மரணம்

கள் சீவுவதற்கு பனைமரத்தில் ஏறிய இளம் குடும்பஸ்தர் ஒருவர் பனை மரத்திலிருந்துவிழுந்து மரணமானார்.

இச்சம்பவத்தில்துன்னாலை தெற்கைச் சேர்ந்த பரமசிவம் பரமேஸ்வரன் (வயது 27) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து பருத்தித்துறை பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் விசாரணை நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். (இ-173)

### புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

வித்தது.

வான் பகுதியில் திடீரென நுழைந்த கிபிர் விமானங்கள் அடுத்தடுத்து சந்தைப் பகுதியில் பல குண்டுகளை வீசின என்றும்—

இத்தாக்குதல் காரணமாக சந்தையில் கூடிநின்ற பொதுமக்கள் 20 பேரும் சந்தைக்கு அருகில் உள்ள பாடசாலை ஒன்றைச் சேர்ந்த மாணவர்கள் இருவரும் உயிரிழக்க நேரிட்டதாகவும் அந்த வானொலி மேலும் தெரிவித்தது.

குண்டு வீச்சு இடம்பெற்ற சந்தைப் பகுதியில் மனித தசைப் பகுதிகள் சிதறிக் கிடப்பதாகவும் இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சுக் காரணமாக பொதுமக்களின் வீடுகள் மற்றும் கடைகள் உட்பட 15 கட்டடங்கள் முற்றாக அழிந்தன. பெரும் எண்ணிக்கையான கால்நடைகளும் அழிந்தன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று முற்பகல் 10-30 மணியளவில் இரணைமடுப் பகுதியிலும் கிபிர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### 473 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதற்கான ஏற்பாடுகளை வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் மேற்கொண்டுள்ளார். (இ-9)

### அஷ்ரப்...

(முதலாம் பக்கத் தொடர்)

பலர் உரையாடிக் கொண்டிருக்கையில் எதிர்ப்புக் குரல் எழுப்பியவர்களைக் கலைப்பதற்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

மேடையை நோக்கி கற்கள் வீசப்பட்டன.

இதனைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலீஸார் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

கூச்சல்எழுப்பிய குழுவினரை நோக்கி றப்பர் ரவைத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முன்பு அமைச்சர் அஷ்ரப் தனது மெய்க்காப்பாளர்களிடம் ஏதோ தெரிவித்தார் என்றும் —

அதன் பின்பு முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம். அதாவுல்லா கூட்டத்தை நோக்கி ''முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளே வாருங்கள்'' என அழைப்பு விடுத்து சில நிமிடங்களில், துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் — ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி குற்றம் சுமத்துகின்றது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள், சந்தைகள் யாவும் பூட்டப்பட்டு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறவில்லை.

பாடசாலைகள் இயங்கவில்லை.

அரச தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன.

அதே நேரம்—நாளை வெள்ளிக்கிழமை பள்ளிவாசலில் ஜும்மா தொழுகையின் பின்பு அக்கரைப்பற்றில் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி அறிவித்துள்ளது. [இ-21]


NEW SCIENCE COLLEGE
JAFFNA.

இணைந்த கணிதம் A/L 2001

நேர்கோட்டு இயக்கம் (V. T. Graph)
ஆரம்பம்: 18 – 09 – 99 சனி (10-00 a.m.)
A. பத்மநாதன் [69108]



# வட இலங்கைச் சங்கீத சபை
# கலைக்கதம்பம்

பிரதம விருந்தினர்:

திரு. சுந்தரம் டிவகலாலா அவர்கள்
(செயலாளர், கல்வி-பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாண சபை)

20-09-1999 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி நிகழ்ச்சி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறும். இந்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் பாடசாலை மாணவர்களும் கலைஞர்களும் குறித்த நேரத்துக்குத் தவறாது சமுகம் கொடுக்கவும்.,

அ. தற்பரானந்தன்
செயலாளர்

வட இலங்கைச் சங்கீத சபை,
வலயக் கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(சி/8956)


## முதன்மை ஆசிரியர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 16

முதன்மை ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9. 30 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

சம்பந்தப்பட்டோரை உரிய ஆவணங்களுடன்சமூகமளிக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் ச. நா. தணிகாசலம் பிள்ளை அறிவித்துள்ளார், (இ-ஐ

## அனுராதபுரம் நீதி மன்றில் ஐவர் ஆஜர்

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். மாவட்டத்தில் பல இடங்களிலும் படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் இரு பெண்கள் உட்பட ஐந்து பேர் கடந்த 11 ஆம் திகதி அனுராதபுரம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ்வாறு ஆஜர் செய்யப்பட்டவர்களில் சின்னத்துரை ஜெகநாதன் (அரியாலை), வசந்தநாதன் ஜெயக்குமார் (கைதடி), கிருஸ்ணபிள்ளை தவேந்திரராஜா (சாவகச்சேரி) ஆகியோர் அனுராதபுரத்திலும் சாந்தலிங்கம் மாலினி (ஆனைக்கோட்டை) ராஜரத்தினம் வளர்மதி (அளவெட்டி) ஆகியோர் வெலிக்கடைச்சிறையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

### இரு இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்)

யப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த பேரின்பநாதன் நிஷாந்தன் [வயது 18], இளவாலையைச் சேர்ந்த அன்ரனி குரூஸ் ஜோன்சன் கெனடி [வயது 29] ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரையும் கைதுசெய்ததை உறுதிப்படுத்தும் 'ரசீது'க்கள் படையினரால் அவர்களது உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-6)

### காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்)

குடா, பூநகரி), கிருபைரத்தினம் சுதன் (வயது 25, நவாலி மானிப்பாய்) ஆகியோர் ஃடந்த 4ஆம் திகதியிலிருந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

இவர்கள் எப்போது? எங்கே? கைதுசெய்யப்பட்டார்கள் என்ற விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை இங்கு நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டுவிட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

### செம்மணியில...

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்டிருந்த சமயம் பகல் 1. 30 மணிஅளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (இ-6)

### வவுனியாவில்...

(முதலாம் பக்கத்தொடர்)

மின் மாற்றிகள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் குண்டுத் தாக்குதல்கள் காரணமாகப் புறநகர்ப்பகுதிகளில் உள்ள மின் மாற்றிகளை உடனடியாக அகற்றவேண்டுமென நேற்று முன்தினம் படையினர் மின்சார சபையினருக்கு அறிவுறுத்தியிருந்தமை தெரிந்ததே.

மேற்படி மின்மாற்றிகள் அகற்றப்பட்டமையால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மின் பாவனையை இழந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

## குண்டுத் தாக்குதலில் இறந்த 22 பொது மக்கள் விவரம்

வவுனியா, செப். 16

புதுக்குடியிருப்புச் சந்தையில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிபிர் குண்டு வீச்சுத் தாக்குதலில் உயிரிழந்த 22 பொதுமக்களின் பெயர் விவரங்களை ''புலிகளின்குரல்'' வானொலி நேற்றிரவு வெளியிட்டது.

உயிரிழந்தோர் விவரம் வருமாறு:-

★ சங்கரப்பிள்ளை செல்லமாணிக்கம் (வயது 70 — 7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

★ அரியநாயகம் கஜந்தினி (வயது 12 — 8 ஆம் வட்டாரம் மந்துவில். புதுக்குடியிருப்பு)

★ செல்லையா ஆறுமுகம் (வயது 59 — வலையர்மடம், முள்ளிவாய்க்கால்)

கணபதிப்பிள்ளை யோகராசா (வயது 36 — வலையர்மடம், முள்ளிவாய்க்கால்

★ அன்ரனி தவராசா திரேசம்மா (வயது 50 — 8 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

★ பாக்கியநாதன் நீற்றம்மா [வயது 56 — 8 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

★ அன்ரனியோ கிறிஸ்ரியா புளோரன்ஸ் (வயது 54 — 8 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

★ பத்மராசா ஜெனிற்றா (வயது 15 — 8 ஆம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு)

★ ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை (வயது 43 — 8 ஆம் வட்டாரம் பிள்ளையார் கோயிலடி, புதுக்குடியிருப்பு)

★ அந்தோனிப்பிள்ளை செபமாலைமுத்து (வயது 45 — 8 ஆம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு)

தனதாஸ் ஜெனோடி (வயது 25 — 8 ஆம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு)

★ சின்னையா ஜெயபாலசிங்கம் [வயது 35 — 6 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

★ சவரியோன் தம்பிராசா (வயது 50 — 8 ஆம் வட்டாரம் மந்துவில்)

★ சின்னத்தம்பி தம்பு (வயது 55 — 6 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு)

★ தம்பையா சுப்பிரமணியம் (வயது 50 — 6 ஆம் வட்டாரம், ஆனந்தபுரம்)

★ அலம்ரோஸ் கொன்ஸ்ரோசஸ் (வயது 20 — பனையடி முள்ளிவாய்க்கால்)

★ இராசநாயகம் உதயரூபன் (வயது 18 — பனையடி, முள்ளிவாய்க்கால்)

★ தேவநாயகம் செபஸ்ரியாம்பிள்ளை (வயது 52 — அந்தோனியார் கோயிலடி, பழையமதவடி)

★ ஆறுமுகம் ஜெபராமன் (வயது 50 — 6 ஆம் வட்டாரம் மந்துவில்)

★ ஜெபராமன் சந்திரகுமார் (வயது 20 — 6 ஆம் வட்டாரம், மந்துவில்)

★ ஜெயம் ஜெய்சங்கர் (வயது 33 — 6 ஆம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு)

★ அன்ரனியோ மெல்றோஸ் (வயது 29— மந்துவில், புதுக்குடியிருப்பு) (இ-7-9)

## ஆணைக்குழு அலுவலகத்துக்கு விஜயம்

யாழ்ப்பாணம், செப். 16

இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ். வந்துசேர்ந்த அமெரிக்கா, பிரான்ஸ், மற்றும் சுவீடன் நாட்டு தூதரகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இன்று காலை யாழ் மனித உரிமை ஆணைக் குழு அலுவலகத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் மனிதஉரிமை மீறல் சம்பவங்கள் குறித்து மேற்படி அதிகாரிகள் அறிந்துகொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

### கருத்துக்...

(முதலாம் பக்கத் தொடர்)

வாக்களிப்பு நிலையங்களில் வாக்களித்து விட்டு வெளியே வந்தவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தே மேற்படி கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இந்தக் கருத்துக் கணிப்பு முடிவுகளை வெளியிடக்கூடாது என இந்திய உயர் நீதிமன்றம் விதித்திருந்த தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்தே நேற்று கருத்துக் கணிப்புப் பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டது. (இ-7-9)

## பருத்தித்துறை பிரதேச மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 16

பருத்தித்துறை பிரதேச மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தலைமையில் வட இந்து மகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும் சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கி உதவிப்பொதுமுகாமையாளர் க. திருநாவுக்கரசுவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-5-173)

### 3 ஊர்காவலர்...

[முதலாம் பக்கத் தொடர்]

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பேரவெல்தலாவக் காட்டுப் பகுதியில் உள்ள ஆயுதக் கும்பல் ஒன்றே இவர்களைக் கொலை செய்துவிட்டு ஆயுதங்களை எடுத்துச் சென்றிருக்க வேண்டுமென மகா ஓயாப் பொலீஸார் தெரிவித்தனர். (இ-7-8

## எலும்போ...

[முதலாம் பக்கத் தொடர்]

எனினும் மாலை 4-00 மணி வரை சடலங்களுக்குரிய எலும்புகளோ அல்லது எச்சங்களோ மீட்கப்படவில்லை.

சுமார் 50 சடலங்கள் வரை அந்தப் பகுதியில் புதைக்கப்பட்டதாக டி. எம். ஜெயதிலக அடையாளம் காட்டியிருந்தார்.

கோயிலுக்கு வடக்கே மூன்று பகுதிகளாக சுமார் 120 சதுர மீற்றர் விஸ்தீரணமுள்ள பகுதியைத் தோண்டுவதற்குத் திட்டமிட்டு நேற்று 8 மீற்றர் நீளமும் 5 மீற்றர் அகலமும் கொண்ட 40 சதுர மீற்றர் விஸ்தீரணம் உள்ள பகுதி தோண்டப்பட்டது. நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்தப்பணி மாலை 4 மணி வரை நீடித்தது.

சுமார் ஒன்றரை மீற்றர் ஆழம் வரை தோண்டப்பட்ட பின்னர் மண்ணின் தன்மை குழம்பிஇருக்கக் காணப்பட்டது.

இன்று காலை 9.45 மணிக்கு மீண்டும் அதே இடத்தில் தோண்டும் பணியை ஆரம்பிப்பது என்றும்—

எலும்புகளோ எச்சங்களோ மீட்கப்படாத பட்சத்தில் அதன் கிழக்குப் புறமாக 40 சதுர மீற்றர் விஸ்தீரணம் கொண்ட மற்றொருபகுதியில் தோண்டும் பணிகளை ஆரம்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது (இ-6)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-09-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அந்திரேசுப்பிள்ளை சூசைப்பிள்ளை
(செல்வநாயகம்)
(சிநோர் நிறுவன பாதுகாப்பு உத்தியோகத்தர்)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அந்திரேசுப்பிள்ளை சூசைப்பிள்ளை (செல்வநாயகம்) 14-09-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்திரேசுப்பிள்ளை, அருளம்மா ஆகியோரின் அன்பு மகனும் லில்லிமலரின் (கிளி) அன்புக்கணவரும், கமில்டன், கனோஜினி, கனோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அமலதாஸ் (லண்டன்) ஸ்ரனிஸ்லாஸ் (உதவிக்கல்விப்பணிப்பாளர் தீவகவலயம்) றூபி, இராசமலர் (டென்மார்க்) இராசநாயகம்(ஜேர்மனி), யான்சி, சகாயராணி (ஜேர்மனி), றதீஸ் (கனடா), சுரேஸ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

16-09-99 இன்று வியாழக்கிழமை பி. ப. 3. 30 மணி (புதிய நேரம்) அளவில் ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் ஆனைக்கோட்டை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
A. ஸ்ரனிஸ்லாஸ்
(சகோதரன்)

'செல்லீஸ்',
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(69120)

## கந்தையா விசுவலிங்கம்

இணுவில் கிழக்கு காரைக்காலைச் சேர்ந்தவரான கந்தையா விசுவலிங்கம் அவர்கள் 15-9-99 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற துரையப்பா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் விஜயலட்சுமி, நடேசலிங்கம் [சுவிஸ்], இராசலட்சுமி [ஜேர்மனி], இராசலிங்கம் [சுவிஸ்], ஜெபலட்சுமி [சுவிஸ்], பாக்கியலட்சுமி [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகநாதன் [இணுவில்], ஜெயலட்சுமி [சுவிஸ்], சச்சிதானந்தம் [ஜேர்மனி], ஸ்ரீதர் [சுவிஸ்], உருத்திரமூர்த்தி [சுவிஸ்] ஆகியோரின் அன்பு மாமனாரும் கார்த்திகா, ஜெனனி, ஜெனித்தா [சுவிஸ்], கபிலினி, கபிலன் [ஜேர்மனி], சஜானா, விதூர்ஷிகன் [சுவிஸ்], கானுஜா, உபிஷா [சுவிஸ்] ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், இராசதேவி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தில்லையம்பலம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [16-9-99] வியாழக்கிழமை நண்பகல் 12. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

காரைக்கால் சிவன்கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(69109)

நயினாதீவு

## சரவணமுத்து சோமசுந்தரம்
(இளைப்பாறிய ஆசிரியர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் 107, நாயன்மார் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சோமசுந்தரம் அவர்கள் 15—09—99 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலாம்பிகையின் அன்புக் கணவரும் கனகாம்பிகை (ஆசிரியை), காலஞ்சென்றவர்களான நடராசா (ஆசிரியர்), சாரதாதேவி (தட்டெழுத்தாளர், யாழ் மாநகர சபை), சுசீலாதேவி (எழுதுவினைஞர், சுகாதாரத் திணைக்களம் யாழ்.) மற்றும் மோகனதாஸ் (கனடா), குகனேசம்மா, ராகினி (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), பிரபாகரி(கனடா), திவாகரி(கனடா), மதசாலினி (கனடா), மாலதி (ஜேர்மனி), வன்மீகநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவசுப்பிரமணியம், நீதிராசா, லலிதா, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16-09-99 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாற்பண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சனகாம்பிகை சோமசுந்தரம்
(மகள்)

107, நாயன்மார் வீதி,
நல்லூர்.

(69121)

# இருபாலை கிழக்கு

# உதயதாரகை வீதியைத் திறக்கக் கோரிக்கை

கோப்பாய், செப். 16

இருபாலை கிழக்கில் அமைந்துள்ள உதயதாரகை வீதியை மக்கள் பாவனைக்கு திறந்து விடுமாறு அப்பிரதேச மக்கள் கோப்பாய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றிய காலம் முதல் இவ்வீதி மூடப்பட்டே உள்ளது. இதனால் அப்பிரதேச மக்கள் குடியிருப்புகளூடாகவே தமது போக்குவரத்தை மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் தற்போது அப்பாதையில் குடியிருப்பாளர்கள் குடியமர்ந்ததனால் பொதுமக்கள் வேறு இடங்களூடாக நீண்ட தூரம் சென்றே தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இப்பகுதியில் இதுவரை 9பேர் மிதிவெடியில் சிக்கியுள்ளனர். அதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(ஐ-27)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

## வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகு

முதற் கலை/வணிகத் தேர்வு
(வெளிவாரி) – 1998

## பாடநேர மாற்றம்

மேற்படி பரீட்சைக்கான பாடநேர அட்டவணையில் 18-09-1999 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த பரீட்சைகள், 09-10-1999 ஆம் திகதியிலும், 01-10-1999 அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த பரீட்சைகள் 10-10-1999 ஆம் திகதியிலும் நடைபெறும்.

மேற்படி பாடநேர மாற்றத்தை பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/8946)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை.

நுண்கலைமாணி
சித்திரமும் வடிவமைப்பும்
கற்கை நெறிக்கான

## அனுமதித் தேர்வு 1999

18-09-1999 ஆம் திகதியன்று நடைபெறவிருந்த மேற்படி தேர்வு 23-10-99 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்தத்தேர்வு 23-10-99 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டும் நடைபெறும்.

– பதிவாளர்
(சி/8955)

# இருவரைக் காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 16

மீசாலை, கந்தர்மடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர் கடந்த 9 ஆம் திகதி முதல் காணாமற்போய் விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஞானவைரவர் ஒழுங்கை, அரசடிவீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த முருகேசு தேவபாலசுந்தரம் (வயது 36) என்பவர் 9 ஆம் திகதி காலை யாழ். நகருக்குச்செல்வதாக சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்றும் —

மீசாலை மேற்கைச் சேர்ந்த மாணவியான கோடீஸ்வரன் எலஸ்கா (வயது 12) என்பவர் 9 ஆம் திகதி பாடசாலைக்குப் புறப்பட்டுச்சென்றபின்னர் வீடு திரும்பவில்லை என்றும் — அவர்களது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-6)

புதிய பிரிவு
( சனி, ஞாயிறு )

ENGLISH
SPOKEN
and
GRAMMAR

by: BRITTO

ஆரம்பம்: 18 – 09 – 99
( சனி, ஞாயிறு )

நேரம்: மாலை 5 மணி

இடம்: கொக்குவில்
( ஞானபண்டிதர்க்கருகில் )

[சி/8953]

## தொலைபேசி இயக்குநர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தொலைத் தொடர்பு நிலையத்தில் கடமையாற்ற G.C E. (A/L) சித்தி அடைந்த பெண் ஒருவர் தேவை.

தொடர்பு:
குமரன் கொமினிக்கேஷன்
27, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
T. P. – 2765

(69114)

## தீவக லயன்ஸ் கழகம்

பாடசாலை மாணவர்களுக்கான
விசேட மருத்துவ பரிசோதனைகளும்(S. M I.)
பொது மக்களுக்கான மருத்துவ ஆலோசனையும்
இலவச மருந்து வழங்கலும்.

வைத்திய கலாநிதிகளால் யாழ். மருத்துவபீட மாணவர்களின் உதவியுடன் 18-9-99, 19-9-99 சனி, ஞாயிறு நாட்களில் நெடுந்தீவில் நடத்தப்பட உள்ளது.

– தீவக லயன்ஸ் கழகம்

(69119)

## லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.

அஜித் – மந்த்ரா
நடித்த
இரட்டை ஜடை வயசு
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30

(69025)

## நாகம்ஸ்
சுன்னாகம்

அர்ஜுன் - ரம்பா - மீனா
வடிவேலு நடித்த
செங்கோட்டை

காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]

(69087)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி சாதனா சிவலிங்கம்
அவர்களுடைய அருமைத் தந்தையார்

## ராஜா சிவலிங்கம்

அவர்களின் மறைவையொட்டித் துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா அலுவலக ஊழியர்கள்,
சிற்றூழியர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/இராமநாதன் கல்லூரி.

(சி/8952)

## ராஜா
யாழ்ப்பாணம்

மம்முட்டி - தேவயானி
மற்றும் பலர் நடித்த
மறுமலர்ச்சி
[illegible]

(சி/8841)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஃபர்ஸ் பீரங்கிகளில் பொருத்த

# இலக்கைச் சரியாகத் தாக்கும் ஏவுகணையை இந்தியா வாங்கும்

புதுடில்லி, செப். 16

போஃபர்ஸ் பீரங்கிகளில் பயன்படுத்துவதற்கென ரஷ்யாவிடம் இருந்து 150 கோடி ரூபா பெறுமதியுள்ள ''கிராஸ்னோ போல்'' வகை ஏவு கணைகளை இந்தியா கொள்வனவு செய்யவுள்ளது.

ஏவுகணைக் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தம் கடந்த மாத இறுதியில் கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏவுகணைகளை 155 மி மீ போஃபர்ஸ் பீரங்கியைச் கொண்டு ஏவ முடியும். அது லேசர் மூலம் வழியறிந்து செல்லக் கூடியது. எதிரிகளின் இலக்கைத் துல்லியமாக குறி தவறாமல் தாக்கக் கூடியது.

ஓர் ஏவுகணையின் விலை 11 லட்சம் ரூபாவாகும்.

கிராஸ்ணோ போல் ஏவுகணை 3 கிலோ மீற்றரில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள எதிரியின் இலக்குகளைத் தாக்கி அழிக்கக் கூடியது.

கார்கில் போரின் போது எதிரிகளின் முகாம்கள் மீது சரமாரியாகக் குண்டு பொழிந்து இந்தியப் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதல் முறையில் குண்டுகளுக்கென பல கோடி ரூபா செலவானது. லேசர் மூலம் இலக்கை நோக்கிக் குறி தவறாமல் செலுத்தும் இந்த ஏவுகணைகளைப் பயன் படுத்தினால் குண்டுச் செலவு பெருமளவு குறையும்.

பல ஆண்டுகளாகவே இந்த ரக ஏவுகணைகளை வாங்குமாறு இராணுவம் கோரி வந்தது. கார்கில் மோதல் களை அடுத்து உடனடியாக அந்த ஏவுகணை வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது. (ஐ-க)

# கிழக்குத் திமோருக்கு ஆஸி. தலைமையில் ஐ. நா. அமைதிப்படை

## முதல்அணி இவ்வாரம் புறப்படும்

நியூயோர்க், செப். 16

ஆஸ்திரேலியா தலைமையிலான சர்வதேச அமைதிப் படையின் முதலாவது அணி இந்தவார இறுதியில் கிழக்குத் திமோருக்குச் செல்லும் என ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா. கனடா, ரஷ்யா, பிரான்ஸ், ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் படைவீரர்கள் இந்தப் அமைதிப்படையில் பங்காற்றவுள்ளனர்.

கிழக்குத் திமோரில் அமைதி மற்றும் பாதுகாப்பை மீண்டும் நிலைநாட்ட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அமைதிப்படைக்கு அதிகாரம் அளிக்கக்கோரி பிரிட்டன் தாக்கல் செய்த மனுவை ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்று அங்கீகரித்துள்ளது.

இதேவேளை—

அமைதி காப்புப் பணி தொடங்கும் போது அமைதிப் படை வீரர்களைத் தாக்கும் நடவடிக்கையில் இந்தோனேசிய ஆதரவுப்படைகள் ஈடுபடலாம் என ஆஸ்திரேலியப் பிரதமர். ஜோன் ஹவார்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையில் —

கிழக்குத் திமோரில் பெரும்பாலான மக்களுக்கான உணவு மற்றும் குடி தண்ணீர் வசதிகள் தடைப்பட்டிருப்பதால் அம் மக்கள் உயிரபாயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருப்பதாகவும்—

டிலியில் மக்களுக்கான உதவிகள் திட்டமிட்டு அழிக்கப் பட்டு வருவதால் மக்கள் வெளியேறி வருவதாகவும்—

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-க)

# போதைவஸ்து பாவனையில் அமெ.ஜனாதிபதிவேட்பாளர்கள்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் மகன் உட்பட ஜனாதிபதி வேட்பாளர்கள் பலர் மீதும் போதைவஸ்துப் பாவனை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் கொக்கேய்ன் மற்றும் மர்ஜுவானா போன்ற போதைவஸ்துக்களை பாவிப்பவர்கள் என்றும் அமெரிக்க அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

இக் குற்றச்சாட்டுக்கள் குறித்து பல வேட்பாளர்கள் ஒத்துக் கொண்டுள்ள போதிலும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தம் மகன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அப்பட்டமான பொய் என திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

இதேவேளையில் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இத்தகைய குற்றச் சாட்டுக்கள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் அச்சம் தெரிவிக்கப் படுகிறது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியின் மகன் டபிள்யூ புஷ் தற்போது ரெக்சாஸ் மாநில ஆளுநராக கடமையாற்றி வருவதும் குறிப்பி . ; ; : ]

(ஐ-ரி)

## உலக அரங்கில்

# இராணுவ அதிகாரிகளுக்கு மரணதண்டனை

தாய்வானுக்காக வேவு பார்க்கும் வேலையில் ஈடுபட்ட குற்றத்திற்காக சீனாவின் இராணுவ உயர் அதிகாரிகள் இருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப் பட்டது.

ஜெனரல் தரத்தில் உள்ள ஒருவருக்கும் சிரேஷ்ட கேர்ணல் தரத்தில் உள்ள ஒருவருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

சீனாவின் அதி உயர் இராணுவ இரகசியங்களை இவர்கள் தாய்வானுக்கு வழங்கி வந்ததாக குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

# விமான விபத்து

றுமேனியாவில் இடம் பெற்ற விமான விபத்தில் கிரேக்க நாட்டு துணைவெளியுறவு அமைச்சர் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் கிரேக்கத்தின் தலைநகர் எதென்சில் இருந்து பெகாரத் நோக்கிச் சென்று கொண்டிருந்த விமானம் 24 ஆயிரம் அடி உயரத்தில் கட்டுப்பாட்டை இழந்ததை அடுத்தே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக் கப்பட்டது.

பால்கன் நாடுகளின் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக கிரேக்கத்தின் வெளியுறவு அமைச்சர் ஜன்னோஸ் கிராமிபியோட்டின் புக்காரெஸ்ட் சென்று கொண்டிருந்தார். (ஐ-க)

# நிலநடுக்கம்

அங்காரா, செப். 16

துருக்கியின் மேற்குப் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை மீண்டும் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 7 பேர் உயிரிழந்தனர் 200 க்கு மேற்பட்டோர்காயமடைந்தனர்.

இந்த நில நடுக்கம் 5.8 றிச்டர் அளவு உடையதாகும்

துருக்கியில் கடந்த ஒரு மாத கால இடைவெளிக்குள் நிகழ்ந்த இரண்டாவது நில நடுக்கம் இதுவாகும்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி துருக்கியின் தென்மேற்குப் பகுதியில் நிகழ்ந்த நில நடுக்கத்தில் 15 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர். 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

# தொழிற்சாலைக் கழிவுகளை யமுனையில் போடத் தடை!

புதுடில்லி, செப். 16

புனித தீர்த்தமான யமுனை நதியில் தொழிற்சாலைக் கழிவுகளைக் கொட்டும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறிச் செயற்படும் தொழிற்சாலைகள் அனைத்தையும் உடனடியாக மூடுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க புனித தீர்த்தமான யமுனையில் பலநாட்டு மக்களும் வந்து தமது பாவங்களைக் கழுவிச் செல்கின்றனர்.

அவ்வாறான தீர்த்தம் தொழிற்சாலைக் கழிவுகளால் நிரப்பப்படுவதைப் பொது மக்கள் ஆட்சேபித்து நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். அந்த மனு நீதிபதியின் பரிசீலனைக்கு விடப் பட்டதை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ—க)

# இராணுவத்தின் நற்பெயருக்கு கட்சிகளால் களங்கம்

## இந்தியத் தளபதிகள் கவலை

புதுடில்லி, செப். 16

இராணுவத்தின் நற்பெயரை அரசியல் கட்சிகள் களங்கப்படுத்துகின்றன என இந்திய ஜனாதிபதி கே. ஆர் நாராயணனிடம் கவலை தெரிவித்துள்ளனர் இந்திய முப்படைத் தளபதிகள்.

இராணுவத் தலைமைத் தளபதி வி. பி. மாலிக் தலைமையில் விமானப் படைத் தளபதி ஏ ஒப் டிப்னிஸ், கடற்படைத் தளபதி சுஷில் குமார் ஆகியோர் கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்து பேசியுள்ளனர்.

இரகசிய இராணுவ ஆவணங்களை அரசியல் கட்சிகள் பொதுமேடையில் விவாதம் செய்வது தேச விரோதச் செயல்.

கார்கில் விவகாரத்தை தேர்தல் பிரச்சினையாக்கி வருவதற்கும் தேவை இல்லாது இராணுவத்தை தேர்தல் பிரசாரங்களுக்கு இழுப்பதற்கும் தனது கடும் எதிர்ப்பைத் மாலிக் தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் சுரீந்தர் சிங் சுட்டிக்காட்டிய சில விஷயங்கள் மிக இரகசியமாகக் காப்பாற்றப்பட வேண்டியவை. ஆனால் அவரது கடித விவரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது போன்ற இரகசியத் தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதால் வெளிநாடுகளுக்கு நமது பாதுகாப்பு இரகசியங்கள் எளிதாகக் கசிகின்றன. இது மிகவும் ஆபத்தானது. அத்துடன், சில புனையப்பட்ட ஆவணங்களும் தேர்தல் பிரசாரத்தில் பேசப்படுகின்றன. இவை இராணுவத்தின் மதிப்பை சீர் குலைக்கின்றன என்றும் இராணுவத் தலைவர் மாலிக் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். இந்தக் கருத்துக்களை விமானம் மற்றும் கடற்படைத் தளபதிகளும் ஆமோதித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-8)

# ஜம்மு காஷ்மீர் பகுதியில் ஊடுருவல்காரருடன் மோதல்

புதுடில்லி, செப். 16

இந்தியாவின் ஜம்மு- காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் ஊடுருவல் காரர்களுக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையில் கடந்த செவ்வாய்க் கிழமை மூண்ட கடும் சண்டையில் 5 பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் உயிரிழந்தனர். 4 பேர் வரை காயமடைந்தனர்.

இந்திய — பாகிஸ்தான் எல்லைக் கோட்டுப்பகுதியில் இருந்து 200 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அக்னோ எனும் பகுதியிலேயே இந்தச் சண்டை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடுருவல்காரர்கள் எறி குண்டுகள் மற்றும் ரொக்கட் மூலம் தாக்குதல் நடத்தினர்.

இதனை எதிர்த்து இந்திய இராணுவத்தினர் கடும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனினும் இந்தியத் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இதேவேளை— ஜம்மு—காஷ்மீர் பகுதியில் கடந்த 24 மணிநேரத்தில் பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 11 பேர் வரை இறந்துள்ளனர் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய தேர்தல்களைகுழப்பும் வகையில் பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் இவ்வகையான தாக்குதலை மேற்கொண்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-க)

# மத்திய கிழக்குப் பிரச்சினை இறுதித் தீர்வுக்கு முயற்சி

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் இடம் பெற்றுவரும் பிரச்சினைகளைத்தீர்க்கும் முகமாக இரு நாடுகளும் இறுதி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் டேவிட் லெவியும் பலஸ்தீன தலைமைப் பிரதிநிதி லேகூட் அவாவும் இஸ்ரேல் காஸா எல்லைப் பகுதியில் சந்தித்து பேச்சுக்களைத் தொடங்கியுள்ளனர்.

பலஸ்தீனத்துக்கான தனி நாடு அந்தஸ்து, அகதிகளுக்கான உரிமைகள், ஜெருஷலேம் நகரத்தின் அந்தஸ்து தொடர்பான விடயங்களில் உடன்பாடு எட்டுவதன் மூலம் இஸ்ரேல் — பலஸ்தீனத்துக்கு இடையில் நூறு ஆண்டுகளாக நிலவும் பூசல் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. [இ-க]


# நல்லூர் லயன்ஸ் கழகத்தின் மருத்துவ சிகிச்சை முகாம்

இடம்: திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

காலம்: 19-09-1999 ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 — 1.30 வரை

லயன் Dr. க. பிரதீப்குமார் தலைமையில்

யாழ். மருத்துவபீட மாணவர்களால் மருத்துவ முகாம் நடைபெறும்.

கண்பரிசோதனை: S. M. பெர்னான்டோ நிறுவனத்தால் பரிசோதனை செய்யப்படும்.

இரத்த அழுத்தம், சலரோகம், பற்புற்று நோய் போன்ற வியாதிகளுக்கும் ஏனைய வியாதிகளுக்கும் சிகிச்சையுடன் இலவச மருந்தும் வழங்கப்படும்.

குறிப்பு: க. ஜெயானந்தன் அதிபர்
யா/ திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

இவருடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும். யா/ திருநெல்வேலி இ.த.க. பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டு சிகிச்சை பெறலாம்.

வி. எஸ். சொக்கலிங்கம்
செயலாளர்
நல்லூர் லயன்ஸ் கழகம்

(சி/8949)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆனந்த குமார் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (770122139V, 091008528) பேர்சுடன் நல்லூர்த் தேரிலன்று தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் விலாசத்துக்கு அனுப்பி உதவவும் (69101)

சேதாதிபதிசிங்கம் தெய்வானைப்பிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன 13.09.99 அன்று சண்டிலிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சி. அருட்சோதி சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [69076]

12.9.99 அன்று கோப்பாய் சந்திக்கும், கிறிஸ்ரியன் கல்லூரிக்கும் இடையில் திறப்புக்கோர்வை ஒன்று தவறி விட்டது கோர்வையுடன் கத்தரிப்பூ நிறத்தில் தாய் லாந்து என எழுதப்பட்டுள்ளது. கண்டு எடுத்தவர்கள் சு. நா. நாராயணமூர்த்தி கோப்பாய் மத்தி முத்துமாரி அம்மன் கோயிலடி, கோப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (69067)

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கச்சாய் வீதியில் 11 ஆம் வட்டாரம் இல. 261 இல் 19 பரப்புக் காணியுடன் கூடிய சிறு வீடு ஒன்றும், அத்துடன் பாவனைக்குச் சிறந்த தண்ணீர்க் கிணறும், பயன்தரு சகல சோலை மரங்களும் அடங்கியது. விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. காங்கேசு, [இளைப்பாறிய ஆசிரியர்] ஐயா கடையடி, மீசாலை. (சி/8941)

## திருத்தம்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி மானிப்பாய், 14-9-99 ஆம் திகதிய உதயனில் வெளியிட்ட விளம்பரத்தில் வேலை விவரம் என்ற பகுதியில் ''5'X20 கூரை'' என்று பிரசுரமானது தவறாகும். 50'X20' என்றே பிரசுரமாகியிருக்க வேண்டும். திருத்தி வாசிக்கவும்.

## போட்டி

நெடுந்தீவு தென்னிந்தியத் திருச் சபையின் மத்தி சிறுவர் பகல் பராமரிப்பு நிலையத்தின் விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (ஐ-111)

### விற்பனைக்குண்டு

கறுப்பு வெள்ளை பிறவுண் நிறங்களில் முயல்கள் விற்பனைக்கு உண்டு. நா. கயூரன் 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (69084)

புதிய 2092 Sony T.V. (யப்பான்) விலை 350,00/- ஒன்றும் பாவித்த Orion டெக், Yamaha (Mate 50) மோட்டார் சைக்கிள் ஒன்றும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 64, 2ஆம் குறுக்கு வீதி, நல்லூர். (69105)

### புறொயிலர் குஞ்சுகள்

3 நாள்கள் வளர்ச்சியடைந்த புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விலை 45/- பிறிமா புறொயிலர் ஆரம்ப தீவனமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வை. சிவகுமார் (அரவிந் வீடியோ அருகில்) நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (69095)

### வீடு, கடை விற்பனை

இல. 394, மணிகூட்டு வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள [பேள் கவுஸ்], மேல் வீடும். இரு கடைகளும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: இல. 3 [15], பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [69057]

யா/ இராமநாதன் கல்லூரி,

## மகளிர் விருதி ஆரம்பம்

எமது கல்லூரியின் மகளிர் விடுதி மீண்டும் 1 - 10 - 99 (வெள்ளிக்கிழமை) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.
சேரவிரும்புவோர் அதிபருடன் தொடர்புகொள்ளவும்.
நன்றி.

- அதிபர்

இராமநாதன் கல்லூரி, சுன்னாகம். (சி/8947)

## மூவாண்டு நினைவலைகள்



மலர்வு: 01 — 10 — 1939

உதிர்வு 16 — 09 — 1996

அமரர்

## பூதர் இரத்தினம்

(தெல்லி. வாலிபர் ஐ. நா. சங்கத்தின் முன்னாள் தலைவர், ஓய்வுபெற்ற ஊழியர், சிமெந்து கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை)

அன்பெனும் உணர்வையூட்டி
அயர்விலா உழைப்பினாலே
பண்புடனே உறவையெல்லாம்
பகிர்ந்தெமக்கு அளித்துவந்தீர்கள்
மூவாண்டு சென்றாலும் உங்கள் முகத்தின்
திருவுருவைப் பாராமல் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

இல. 47, மெமோறியல் ஒழுங்கை,
மானிப்பாய். (சி/8933)

வாகன உரிமையாளர்களுக்கு

## ஒரு நற்செய்தி!

உங்கள் சகல வாகனங்களும் சிறந்த முறையில் சேவிஸ் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**யூனியன் சேவிஸ் ஸ்ரேசன்,**
இருபாலைச்சந்தி,
கோப்பாய்.

[69065]

## நன்றி கூறுகின்றேன்

15-9-99 அன்று உதயன் பத்திரிகையில் 4 ஆம் பக்கத்தில் வெளிவந்த நன்றிகூறுகின்றேன் விளம்பரத்தில் நல்லூர் திருவிழாக் கால தண்ணீர்ப்பந்தலுக்கு அன்றுதொட்டு இன்றுவரை சீனி மூடைகள் தந்து உதவியவர்களின் பெயரில் மாசிலாமணி நகைமாளிகை கன்னாதிட்டி என்பதற்குப் பதிலாக பாலகிருஸ்ணா நகைமாளிகை கன்னாதிட்டி என தவறுதலாக எழுதப்பட்டுவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்.

சு. கனகரத்தினம்.
நிர்வாகி
நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல். நல்லூர்.

547, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (69100)

## நாவற்குழி வெண்ணையன் கட்டு வீரபத்திரர் ஆலயம் அதிர்ஷ்டலாப சீட்டு முடிவுகள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு | — 5943 |
| இரண்டாம் பரிசு | — 641 |
| மூன்றாம் பரிசு | — 3210 |

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:
3431, 6010, 3242, 2057, 2133.

மேற்படி பரிசில்களை ஆலய பரிபாலன சபையினருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

— பரிபாலனசபை

வெண்ணையன் கட்டு வீரபத்திரர் ஆலயம்,
நாவற்குழி. (69097)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது கொழும்பில் வசித்தவரான

உலோகசிற்ப சக்கரவர்த்தி, சிற்பக்கலைமாமணி, சிற்பவல்லுனர், சிற்பமேதை

## துரையப்பா சின்னராஜா

ஆச்சாரி அவர்கள்

14-09-99 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்.

**மைத்துனர்கள்,**
லெ. பக்கீர்சாமி (கனடா)
லெ. வேணுகோபால் (யாழ்ப்பாணம்)
லெ. கெங்காதரன் (யாழ்ப்பாணம்)
லெ. ஜெகநாதன் (வவுனியா)
வே. இராமன் (மருமகன்) குடும்பத்தினர்.

306, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (69096)

# பாலாஜி கிறீம் ஹவுஸ்

**61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

உலகம் 2000 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கின்ற வேளை,
யாழ். நகரில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட ஐஸ்கிறீம் ஸ்தாபனத்தை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம்.
இஷ் ஸ்தாபனத்தை எனது நண்பரும் பிரபல தொழிலதிபருமான
பேரம்பலம் நாகரட்ணம் (E.S.P & Co, கஜமுகன் ஹாட்வெயர்) அவர்கள்

## 16 - 09 - 1999 (இன்று)

திறந்து வைப்பார்கள் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதோடு எனது நண்பர்களையும், வாடிக்கையாளர்களையும் இத்திறப்புவிழாவில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.
தனிப்பட்ட அழைப்பு இல்லை

**இது முற்றிலும் நவீன முறையில் அமைக்கப்பட்ட கிறீம் ஹவுஸ் இனிமையான புதிய அனுபவத்தை உங்களுக்கு அளிக்கும்:**

அன்புடன் BALAGI

(69103) பாலாஜி கிறீம் ஹவுஸ் 61, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாயில் 874 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்க ஏற்பாடு

வலி.கிழக்கு, செப்.16

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேலும் 874 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் பிரிவில் 96 நிரந்தரக் குடும்பங்களுக்கும், நீர்வேலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் 90 நிரந்தரக் குடும்பங்களுக்கும், ஊரெழு கிராம சேவையாளர் பிரிவில்197நிரந்தரக் குடும்பங்களுக்கும், 76 இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கும்,

ஆவரங்கால் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 8 நிரந்தரக் குடும்பங்களுக்கும்—

இடைக்காடு கிராம சேவையாளர் பிரிவில் 48 நிரந்தரக் குடும்பங்களுக்கும்—

அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 73 நிரந்தரக் குடும்பங்களுக்கும். 107 இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கும்—

சிறுப்பிட்டி மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் 49 நிரந்தரக் குடும்பங்களுக்கும், 16 இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கும்—

அச்சுவேலி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் 37 நிரந்தரக் குடும்பங்களுக்கும், 60 இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கும்—

பத்தமேனி கிராம சேவையாளர் பிரிவில் 35 நிரந்தரக் குடும்பங்களுக்குமாக மொத்தம் 874 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு பெயர்களை உறுதிப்படுத்திய பின் தத்தமது வங்கிகளில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என பிரதேச செயலக அதிகாரி தெரிவித்தார்.

(ஐ-180)

## முதலாம் ஆண்டு நீங்காநினைவஞ்சலி



அமரர் **சரவணை மாணிக்கவாசகர்**
(உரிமையாளர் ரூபி போட்டோ- யாழ்ப்பாணம்)

மலர்வு 25 – 05 – 1943

உதிர்வு 16 – 09 – 1998

அன்பு ஒளிவீசிய உங்கள் முகம் பார்த்து
ஆண்டொன்று ஆனதையா
ஆண்டுகள் நூறு சென்றாலும் உங்கள்
அன்பு முகம் எம்மை விட்டு அகலாது
அன்பனுக்கு அன்பனாய் நண்பனுக்கு நண்பனாய்
பண்புக்குப் பண்பாளனாய் ஆசானுக்கு ஆசானாய்
வாழ்ந்து காட்டினீர்கள்
எத்தனை நாள் சென்றாலும் உங்கள் நினைவு
எம்மை விட்டு நீங்காது!

போட்டோ ரவி அன் வீடியோ
நிறுவனத்தினர்.

இல. 20,
யாழ். றோட்,
யாழ்ப்பாணம்.

[69034]

## போட்டிகள் ஒத்திவைப்பு

கைதடி, செப். 16

சாவகச்சேரி கல்விக் கோட்டத்தினால் எதிர்வரும் சனிக்கிழமை நடத்தப்பட இருந்த தையல் மனைப் பொருளியல் போட்டிகள் அடுத்த மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி நா. சத்தியநாதன் தெரிவித்துள்ளார்.

இப் போட்டிகள் கோட்ட மட்டத்தில் ஆண்டு 7தொடக்கம் ஆண்டு 11 வரையுள்ள மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

(ஐ- 74)

சாவகச்சேரி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
சாவகச்சேரி (வ - து)

## பதவி வெற்றிடம்

## பொது முகாமையாளர்

நிபந்தனைகளும் தகைமைகளும்:

1. விண்ணப்பதாரர் 02 வருடங்களுக்கு மேல் யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

2. கல்வித் தகைமை:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 7 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகம் ஒன்றின் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் வர்த்தக/தொழிற்றுறை ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/க. பொ. த. (உயர்தரம்)3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழிற்றுறைஸ் தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

3. வயது:

அ) 25—50 வரை.

ஆ) சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.

4. சம்பளம்:

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபத்திற்கமைய,
108/81: 101:6 (31/97—8)
3450 — 5650
100X10 — 120X10

5. சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட பிணை செலுத்தப்பட வேண்டும்)

6. விண்ணப்பங்கள் யாவும் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்கள், கல்விச்சான்றிதழ், தொழில் தகைமைச்சான்றிதழ், வசிப்பிட அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" என 05—10—1999 திகதிக்கு முன் கீழ்க் காணும் விலாசத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். மேலதிக விவரங்களைச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்
சாவகச்சேரி, பல நோ. கூ. சங்கம்.

சாவகச்சேரி.

14—09—1999

(சி/8943)

யாழ். மாவட்ட
பேக்கரி
உரிமையாளர் சங்கம்
JAFFNA DISTRICT
MASTER BAKERS
ASSOCIATION

8 ஆம் ஆண்டு நிறைவு விழா

காலம்: 19-09-1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10 மணி (பழைய நேரம்)
இடம்: தலைமைச் செயலகம்
(317, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

ஆண்டு விழாவின் சிறப்பு நிகழ்வாக,
யாழ். நகரின் தலைசிறந்த வைத்தியர் குழாம் கலந்து கொள்ளும்
மாபெரும் இலவச வைத்திய முகாம் நடைபெறவிருக்கின்றது

- மருத்துவ ஆலோசனை
- மருத்துவ பரிசோதனை

மற்றும் மருந்துகள் என்பன இலவசமாக வழங்கப்படும். எனவே, அங்கத்தவர்கள் அனைவரும் தத்தமது குடும்பத்தினருடன் இதில் கலந்து கொண்டு பயனடையுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

– நிர்வாகத்தினர்,
யா. மா. பே. உ. ச

(சி/8939)

உ
சிவமயம்

மங்களகரமான திறப்பு விழா

ROOBAN ELECTRONICS
(REPAIRING SHOP)
NEAR OLD POLICE STATION,
K. K. S. ROAD, CHUNNAKAM.

அன்புடையீர்!
நிகழும் பிரமாதி வருடம் ஆவணி மாதம் 30 ஆம் நாள் (16—09—99) வியாழக்கிழமை இன்று காலை 11.00 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

காங்கேசன்துறை வீதி, சுன்னாகத்தில்
ரூபன் எலக்றோணிக்ஸ்

என்னும் ஸ்தாபனத்துக்கான திறப்பு விழாவை நடத்த இறையருள் கைகூடி இருப்பதால் அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து திறப்பு விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அனைவரினதும் நல்வரவை நாடும்
உரிமையாளர் ந. ஜெயரூபன்

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

(69094)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
முருகன் துணை

வேலணை மேற்கூர்

# சிற்பனைப் பதியில் அருளாட்சி புரியும் வேலவனின்
# திருக்குடத் திருமஞ்சன திருவருள்மலர்

## கும்பாபிஷேக நாள்

## பிரமாதி வருடம் ஆவணி மாதம் 30 ஆம் நாள் வியாழக்கிழமை
## (16 - 09 - 1999- காலை 10 . 20 - 11 . 40)

விழிக்குத் துணை திருமென் மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத்துணை முருகாவெனு நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத்துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே!

யாழ்ப்பாண நகரின் மேற்கே அமைந்ததும் ஸப்த தீவுகளின் தலைமைத் தீவாக விளங்கும் வேலணை மேற்கில் சைவமும், தமிழும், புராணபடன கலாசாரமும் இன்னோரன்ன சிறப்புகள் பலவற்றைக் கொண்டது சிற்பனைப்பதி. இப்பதியில் அருளாட்சி புரிகிறான் வேலவப் பெருமான்.

சூரபத்மனைச் சங்காரம் செய்த வேல் ஆகாய கங்கையில் நீராடிக் கந்தனை வந்தடைந்த இடம் வேலணை என்பது ஐதீகம். (வேல் அணைந்த இடம்) இந்த வேலணையின் மேற்கூரின் மத்திய பகுதியில் அமைந்த கோயிலே சிற்பனை முருகன் ஆலயம்.

இவ்வாலயம் ஏறத்தாழ நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் கந்த உடையார் என்ற சைவ பக்தரின் பூசை மடமாக இருந்ததாகக் கூறுவர். இந்த மடத்தில் கந்த உடையாரால் ஸ்தாபிக்கப்பட்டு வணங்கப்பட்ட வேல் பின்னர் வேல் கோயிலாகி இன்று சிற்பனை முருகன் ஆலயமாக விளங்குகிறது.

வரலாற்று ஓட்டத்தில் ஆலயம் பல வழிகளிலும் வளர்ச்சி கண்டது. எண்பதுகளில் ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருப்பணி வேலைகள் பல நடைபெற்றன. தொண்ணூறுகளில் முருகப்பெருமானுக்கு கும்பாபிஷேகப் பெருவிழாவைச் செய்வதற்கான சகல பூர்வாங்க ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டன. கும்பாபிஷேகத்திற்கான நாளும் குறிக்கப்பட்டது. ஆனால் எதிர்பாராமல் நிகழ்ந்த தீவக மக்களின் புலப்பெயர்வு முருகனின் கும்பாபிஷேகத்திற்கு இடையூறானது. அப் புனித கைங்கர்யம் அப்போது நிறைவேறாமல் போனது.

இன்று மீளவும் இப் பிரதேச மக்கள் மீளக்குடியமரத் தொடங்கினார்கள். முருகன் அடியார்களின் பெரு முயற்சியினாலும், அயராத உழைப்பினாலும் ஆலயம் புதுமெருகும், புதுப்பொலிவும் பெற்றது. இன்று எம்பெருமானுக்குத் திருக்குடத் திருமஞ்சன விழா வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

விநாயகர், வள்ளி, தேவசேனாசமேத சண்முகர், முத்துக்குமாரர், மகாவிஷ்ணு, வைரவர், நாகதம்பிரான் ஆகிய மூர்த்திகளுக்குப் புதிதாக ஆலயங்கள் அமைக்கப்பட்டு, புதிய மணிக்கோபுரம் அமைக்கப்பட்டு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ முருக மூர்த்திப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் நவகுண்ட பக்ஷ சகித புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

சிற்பனை முருகனுக்கு திருக்குடமுழுக்குப் பெருவிழா செய்யவேண்டும் என்று அல்லும், பகலும் அயராது உழைத்த இக்கிராமத்தைச்சேர்ந்த பல அடியவர்கள் இன்று இக்கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து உலகின் பல பாகங்களிலும் வசிக்கிறார்கள். இன்னும் பலர் முருகனின் கும்பாபிஷேகக் கனவுகளுடன் முருகனிடம் முத்திபெற்றும் விட்டார்கள். இவர்கள் எல்லோருக்கும் இன்று நடைபெறும் பெருஞ்சாந்தி விழா பெரும் மனநிறைவையும், மகிழ்ச்சியையும், ஆத்ம சாந்தியையும் நிச்சயம் கொடுக்கும். இன்று நிச்சயம் சிற்பனை வேலனை இவர்கள் எல்லோரும் ஒரு காலம் நினைந்து நெஞ்சுருகி விழிசொரிந்து, உணர்வு நெகிழ்ந்து பரவசமடைவார்கள்.

மேற்கூர்க் கிராமம் இன்று மக்கள் இல்லாமல் பொலிவிழந்து, புகழ் மங்கிக் கிடந்தாலும் இன்று சிற்பனை முருகன் நிமிர்ந்து நின்று இங்கு நான் இருக்கிறேன். ''வேலுண்டு வினையில்லை'' 'யாமிருக்க பயமேன்'' என்று அடியவர்களாகிய எம்மைப்பார்த்துக் கேட்பது போல் சிற்பனையான் மீண்டும் நிமிர்ந்து நிற்கின்றான்.

புதுப் பொலிவு பெற்ற கந்தனின் திருக்கோயில் இக்கிராமத்திற்கு புதுத்தெம்பையும், புதிய நம்பிக்கையையும்எதிர் காலத்திற்கானஒளியையும் வழியையும் காட்டி நிற்கிறது. ''தேவர் சிறை மீட்ட செம்மல்'' நிச்சயம் எங்களையும் மீட்பான் என்ற நம்பிக்கை ஒளி அடியவர்களின் மனதில் பிரகாசிக்கத் தொடங்கி விட்டது.

கும்பாபிஷேகப் பெருவிழாவில் அடியார்கள் அனைவரும் கலந்து முருகப்பெருமானின் இஷ்டசித்திகளைப்பெற்றுபெருவாழ்வு வாழ்வீர்களாக.

★ ★ ★

பிரதிஷ்டா பிரதம குரு
வேதாகம கிரியாபூஷணம், ஆலய பிரதம குரு

### சிவஸ்ரீ நடராஜ உமேந்திரக் குருக்கள்

அவர்கள்

★ கும்பாபிஷேக நாள்களில் ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

★ கும்பாபிஷேக தினத்தன்று (16 - 09 - 1999) வியாழக்கிழமை 10.20 — 12 00 மணிவரை கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் அனைத்தும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நேர்முகவர்ணனை செய்யப்படும்.

★ கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். மண்டலாபிஷேகத்தில் உபயம் செய்ய விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்க.

''உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே''

**ஆலய பரிபாலன சபையினர்**

சிற்பனை முருகன் ஆலயம்,
வேலணை மேற்கு,
வேலணை.

(69093)

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஆவணி மாதம் 30 ஆம் நாள் (16-09-99) வியாழக்கிழமை பகல் 12-30 மணி முதல் 1-29 மணி வரையுள்ள தனு லக்னமும் அனுஷ நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

திரு. திருமதி நடராஜா
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
திருநிறை செல்வன்

**உதயகுமாரன்**

(கஜன் ரேடர்ஸ்)
அவர்களுக்கும்



திரு. திருமதி இந்திரசித்து
தம்பதிகளின்
செல்வப்புதல்வி
திருநிறைசெல்வி

**கீதாஞ்சலி**

அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி இ. நடராஜா
இல. 17, இந்து மகளிர் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி இந்திரசித்து
(லலிதா ஜுவலறி)
இல. [illegible] வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

[69099]

---

## வாழ்த்துகின்றோம்



எமது சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் தற்போதைய பொதுச் செயலாளரும், சங்கானை ப. நோ. கூ. சங்க பணிப்பாளர் சபை உறுப்பினரும், சங்கானை கிழக்கு மத்தி கிளை இல. 30 இன் தலைவரும், சங்கானை புனித பிரான்சீஸ் சலேசியார் ஆலய பரிபாலனசபைச் செயலாளருமான

### திரு. செல்லையா குமாரசிங்கம்

அவர்கள்

**சமாதான நீதிவானாக**

நியமிக்கப்பட்டதைப் பாராட்டுவதுடன் அவரது சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

**சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும்.**

(69089)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சமாதான நகரம் அர்த்தமுள்ளதாக..

திருகோணமலை நகரத்தை சமாதான நகரமாக்கும் ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார ஸ்தாபனத்தின் ('யுனெஸ்கோ'வின்) முடிவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதற்கான முன்னோடி நிகழ்வையும் நேற்று முன்தினம் அங்கு நடத்தியது.

திருமலை நகரம், சமாதான நகரம் என்பதனை எடுத்துக் கூறும் சின்னமாக சமாதானக் கோபுரம் ஒன்றைக் கட்டுவதற்கான அடிக்கல் அன்றைய தினம் அமைச்சர் மங்கள சமரவீரவினால் நடப்பட்டது. சமாதான நகரம் பிரகடனப்படுத்தப்பட்டதைக் குறிக்கும் வகையில் அந்த நகரின் திறப்பு நகரசபைச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

தமது நகரம் இத்தகைய ஒரு சிறப்புப் பெற்றிருப்பது குறித்து அங்கு வாழும் மக்கள் நிச்சயம் மகிழ்ச்சி அடைவர்.

ஆனால் சமாதான நகரம் பிரகடனம் சம்பந்தமான முதலாவது நிகழ்வே, பலத்த பாதுகாப்பின் மத்தியிலேயே — அதில் கலந்து கொண்ட மக்களிடம் ஒருவகை மனப்பதற்றம் நிலவும் சூழ்நிலையிலேயே — நடைபெற்றது. சமாதான நகரம் என்பது வெறும் காட்சிப் பொருளாக, இனிக்கும் சொல்லாக மட்டுமன்றி, நடைமுறையில் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும். சமாதானத்தை உருவாக்குவதில் சகலரும் மனதளவில் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

அடுத்த வருடம் — ஆண்டு 2000 — சமாதான கலாசார ஆண்டாக ''யுனெஸ்கோ''வினால் அறிவிக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் சமாதானம் வரவேண்டும் என்ற அர்த்தத்திலே அந்தப் பிரகடனம் செய்யப்பட்டிருப்பதாக 'யுனெஸ்கோ'வின் செயலாளர்நாயகம் தெரிவித்திருந்தார்.

சமாதான கலாசாரம் என்பது சகல மக்களுக்கும் பிரஜைகளுக்கும் அரசியல் சமத்துவம், சமூக சமத்துவம், பன்முக கலாசார உரிமை கிடைத்தல் ஆகும் என்று யுனெஸ்கோ' வினால் அர்த்தம் அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கூறப்பட்ட மூன்றில் ஒன்றிலேனும் சிறு வீதமேனும் நடைமுறையில் உண்டா என்றால் இல்லை. கடந்த ஐம்பது வருடங்களாக தமிழ் மக்கள் கேட்டு வருவது இவற்றையே. ஆனால் அவை சாத்தியமாக கொழும்பு அரசுகள் இதுவரை இடங்கொடுக்கவில்லை.

சமாதான நகரமாக்கப்பட்டுள்ள திருகோணமலையை எடுத்துக் கொண்டாலும் அங்கு தமிழ் மக்களுக்கு அரசியல் சமத்துவம், சமூக சமத்துவம், சமயசமத்துவம், கலாசாரதனித்துவம் பேணல் என்று எதுவும் இல்லை.

நகரசபையின் முன்னாள் தலைவர் பி. சூரியமூர்த்தி யுனெஸ்கோ அமைப்பாளரான பேராசிரியர் மோகியாடிக்கு அனுப்பிய கடிதத்தில் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்கள் மீது பெரும்பான்மை மக்களின் — அவர்களின் அரசின் — அடக்குமுறை எவ்வாறு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என்பதனை பத்து அம்சங்களாகத் தொகுத்து விவரித்துள்ளார்.

திருகோணமலையில் சமாதானம் உண்மையாகவே குடிகொள்வதற்கு முன்னாள் நகர பிதா தெரிவித்த விடயங்கள் உட்பட ஏனைய உரிமை மறுப்புகள், பாகுபாடுகள், அடாவடித்தனங்கள், அடக்குமுறைகள் அகற்றப்படவேண்டும். சமாதானம் குறித்த தனிநபர் விழிப்புணர்வும் ஈடுபாடும் ஒரு வருடத்தில் மலர்ந்து விடுமா? வளர்ந்து விடுமா? அரசாங்கம் நினைத்தால் செய்யலாம். அவ்வழியில் கரிசனையுடன் செயற்படுமா?

# பாடசாலைகள் ஊடாக கல்வி மூலம் சமாதானம்

## கட்டுரைப் போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 16

கல்வி மூலம் சமாதானம் என்ற கருத்துப் பகிர்வை பாடசாலைகள் ஊடாக முன்னெடுக்க ''யுனெஸ்கோ'' நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உள்ளது. இத்திட்டத்தை யாழ்ப்பாணத்திலும் அமுலாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையுள்ள மாணவ, மாணவியரிடமிருந்து சமாதானம், சகிப்புத்தன்மை சார்பான கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. கட்டுரைகள் 300 சொற்களுக்கு மேற்படாமலிருக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் பத்தாம் திகதிக்கு முன்னர் ''ஆசிரியர் ''உதயன்' 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு கட்டுரைகள் அனுப்பப்பட வேண்டும். கட்டுரைகள் பாடசாலை அதிபர்களினால் மாணவரின் சொந்த ஆக்கமென உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தகுதி வாய்ந்த நடுவரால் மாதாந்தம் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு கட்டுரை உதயனின் வாரமலர் ''சஞ்சீவி''யில் வெளியிடப்படும். செப்ரெம்பர் 1999 இல் இருந்து பெப்ரவரி 2000 வரை இவ்வாறு கட்டுரைகள் வெளியிடப்படும்.

சஞ்சீவியில் வெளியான கட்டுரைகளில் முதல் மூன்று கட்டுரைகளுக்கும் முறையே ரூபா1,250/-, 1000/-, 750/- பரிசில்கள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வழங்கப்படும்.

கட்டுரைகள் மனித குலத்தில் சமாதானம், சகிப்புத்தன்மையை முன்னெடுப்பதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் என மாவட்ட இணைப்பாளர் நா. க. சண்முகநாத பிள்ளை அறிவித்துள்ளார்.

(அ)

## பயிலமர்வு

கொக்குவில், செப் 16

யாழ் கல்வி வலயத்துக்கு உட்பட்ட தரம் 6 முதல் தரம் 11 வரை சித்திரப் பாடம் கற்பிக்கும் சித்திர ஆசிரியர்களுக்கான பயிலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

பயிலமர்வில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் பாடத்திட்டம், ஆசிரியர்கைநூல், பாடநூல், ஒட்டுச்சித்திர உபகரணங்கள் ஆகியவற்றைக் கொண்டுவருமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

(க-60)

# பல திருட்டுக்களில் ஈடுபட்ட குழுவினர் புத்தூரில் கைது

அச்சுவேலி, செப். 16

புத்தூர், சிறுப்பிட்டி, மட்டுவில், கெருடாவில் ஆகிய பகுதிகளில் பகலிலும் இரவிலும் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்ததாகக் கருதப்படும் குழு ஒன்று புத்தூரில் வைத்து பிடிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாத அமைப்புக்களின் பெயர்களைக் குறிப்பிட்டு திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த இந்தக் குழுவில் 13 வயது பாடசாலை மாணவன் ஒருவன் உட்பட ஐவர் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

புத்தூர் சிறுப்பிட்டிப் பகுதியில் இந்தக் குழுவினர் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட சமயம் புத்தூர் கலைமதி சனசமூக நிலைய உறுப்பினர்களால் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

படையினர் மேற்கொண்ட விசாரணையின் பேரில் இந்தக் குழுவினரால் திருடப்பட்டதாகக் கருதப்படும் மூன்று சைக்கிள்கள், இரண்டு றேடியோக்கள் மற்றும் ஒரு தொகைப் பணம் ஆகியன மீட்கப்பட்டுள்ளன என்றும்-

இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளதாகக் கருதப்படும் ஏனையோரைக் கைது செய்ய படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(ஐ-11-3)

## நாளை

ஆவணி 31
வெள்ளிக்கிழமை
திதி: ஸப்தமி
முற்பகல் 11.39 வரை
நட்சத்திரம்: கேட்டை
நள்ளிரவு 12 17 வரை.
சுபநேரம்: 6.03—7.33
ராகுகாலம்: 10 33 12 03
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## உதயவாக்கு

உபகரணங்கள் இல்லாவிட்டாலும் பணம் இல்லாவிட்டாலும் நல்ல நண்பர்கள் இருந்தால் காரியங்களைச் சாதிக்க முடியும்.

— கீதாபதேசம்

## சாயி சிந்தனை

இயல்பாகவே அனைவரிடமும் அன்பு என்பது நிறைந்திருக்கிறது அதனை உன் மனைவி, மக்கள், சொந்தம் எனத் திருப்புவதற்குப் பதில் இறைவனை நோக்கித் திருப்பிவிடு. இவ்வாறு செய்யும்போது உனக்கு எதுவேண்டுமானாலும் கிடைக்கும்! இறைவன் அளித்திருப்பது இதயம! அதனை அவருக்கே சமர்ப்பித்து விடு உனக்கு எந்தப் பயமும் வேண்டாம். இந்த உடலையும்கூட இறைவனுக்கே சமர்ப்பணம் செய்துவிடு. ஏனெனில் உடலும்கூட இறைவன அளித்துள்ள பரிசே! ஒவ்வொரு செயலும் பிரேமையை அடிப்படையாகக் கொண்டு விளங்கவேண்டும். சேவை செய்வதும் பிரேமையுடன் செய்யவேண்டும் நீ கடவுளைச் சேர்ந்தவன் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

(ஆதாரம்: சாயி அருளமுதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

'உதயன்' பத்திரிகைப் பணிமனை மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலைக் கண்டித்து பொது அமைப்புக்கள் தொடர்ந்து அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன.

அவற்றில் சில வருமாறு:-

## உதயதாரகை கலைமன்றம்

பாஷையூர் உதய தாரகை கலைமன்றம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

தங்கள் பத்திரிகைப் பணியகம் மீது கையாலாகாதவர்கள் நடத்திய குண்டு வீச்சு எம் மன்றத்தை அதிர்ச்சியடைய வைக்கின்றது. ஜனநாயகத்தை நேசிக்கும் எந்த மனிதனும் இப்படியான வன்முறைக் கலாசாரத்தை ஏற்றுக்கொள்ள மாட்டான். உயிரைப் பணயம் வைத்து உண்மையை எழுதவேண்டிய உன்னதமான பணி உனக்கு. வருந்தாதே உதயனே! வானை முட்டும் உன் புகழ்.

## இந்து மத குருமார் ஒன்றியம்

இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம் சார்பில் அதன் பொதுச் செயலாளர் பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: -

கதிரவனைக் கண்டு தாமரை மலர்வது இயற்கையின் விநோதம். அதிகாலையில் 'உதயன்' பத்திரிகையைக் கண்டதும் மக்கள் மனங்களெல்லாம் மலர்வது நிதர்சனமான உண்மை. செய்திப் பத்திரிகையாக மட்டுமல்லாது ஒரு சிறந்த சஞ்சிகை போன்று வெளியிடப்படும் ஒரே ஒரு பத்திரிகை உதயன் ஒன்றே. இவ்வாறு செயற்படும் இயங்கும் பணிமனை மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை மிக மிக வருந்தத்தக்க செயலாகும் தமிழ் மக்களின் உள்ளம் கவர்ந்த 'உதயன் — சஞ்சீவி' பத்திரிகைகள் மேன்மேலும் இடையூறுகள் இன்றி சிறப்புடன் பவனி வர எமது ஆசிகள்.

## ச. ச. நிலையங்களின் சம்மேளனம்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது —

மிகவும் இக்கட்டான சூழ் நிலையில் குடாநாட்டில் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் ஒரேகுரலாக வெளிவருகின்ற இப்பத்திரிகையின் அர்ப்பணிப்பு மிக்க சேவையை நாம் பாராட்டுகின்றோம்.

பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரே ஒரு இதழான 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான கைக்குண்டுத் தாக்குதல் மிகவும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும்.

இன்று மிகுந்த சோதனையோடு எமது மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எமது மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் துணிவுடன் பத்திரிகா தர்மத்துக்கு முரண்படாத வகையில் 'உதயன்' எடுத்துச்சொல்லி வெளி உலகை நீதியின்பால் நிலைத்திருக்கச் செய்கின்றது.

இவ்வாறு யாழ் மக்களின் துயர் துடைப்பிற்கு குரல் கொடுத்தும் மற்றும் தேவைகளை இனம் கண்டு செயற்படும் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் ஒரே ஒரு பத்திரிகை ஸ்தாபனத்தின் மீதான குண்டு வீச்சு கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இத்தகைய தாக்குதல்களினால் உதயனின் மிடுக்கோ, இலட்சிய வேட்கையோ, துணிச்சலான முறையில், கருத்துக்களை வெளியிடும் அதன் வீரியமோ பாதிக்கப்படக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தத் தாக்குதல் சம்பவத்தை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் சார்பில் மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

## வ. பி. போ. ச. நலன்புரிசங்கம்

வடபிராந்திய போக்குவரத்துச்சபை நலன்புரி சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''கோல் எடுத்தவன் குருட்டுப்பிள்ளை'' என்பர். ஜனநாயகத்தின் முதுகெலும்பான பத்திரிகைச்சுதந்திரம், உதயன் பத்திரிகையினாலும் முடிந்தவரை பேணப்படுவதாற்றான் 'துணிச்சலான பத்திரிகை' என விருது பெற்றது குண்டு வீச்சுக்கு காரணமான செய்தியை அவர்களுடன் பேசிதீர்ப்பதற்கு பல வாய்ப்புக்கள் இருக்கின்றன ஆயுதக் கலாசாரம் ஊர்வாயை மூடி விடாது. காலில் அழுக்குப்பட்டுவிட்டால் கழுவத் தெண்டிக்கவேண்டும் எல்லா இடங்களிலும் பரவச் செய்ய முற்பட்ட செயலே குண்டு வீச்சு எடுத்தவனுக்கு ஒரு பாவம், கொடுத்தவனுக்கு பல பாவம். கோழி உண்டகள்வரும் கண்டனம் தெரிவிப்பது போன்ற நிலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்நிலை தொடர்ந்தால் போர் ஓயாது!

வ.பி.போ.சபை சேவையில் அக்கறையுடைய 'உதயன்'க்கு என்றும் எமது ஆதரவு இருக்கவே செய்யும்.

## சைவக் குருமார் அர்ச்சகர் சபை

அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபை சார்பில் அதன் தலைவர் சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது பிராந்தியத்தில் ஒரேயொரு செய்தி இதழாக வெளிவருவது 'உதயன்' நாளிதழாகும். உலகின் அன்றைய செய்திகளை உடனுக்குடன் வெளியிடுவதும் நம் மக்களிற்கு பத்திரிகை வாயிலாக நன்மை தீமைகளை உணர்த்துவதும் ஒரு பத்திரிகையின் தலையாய கடமையாகும் அந்தக் கடமைகளில் இருந்து சிறிதளவும் வழுவாது தன் கடமைகளை ஆரம்பம் முதல் இன்று முதல் நடத்திவருகின்றது உதயன் பத்திரிகை என்று கூறுவது மிகையாகாது. நாம் காலையில் நித்திரை விட்டெழுந்ததும் முதல் தேடுவது உதயன் பத்திரிகையைத்தான். மற்றைய கடமைகளெல்லாம் அதன் பின்புதான் இப்படியான ஒரு பத்திரிகை அலுவலகத்தை தாக்க முற்பட்டது மிலேச்சத்தனமான செயலாகும். இச்செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்க செயலாகும். இத்தகைய ஒரு நிலைமை மீண்டும் வராமல் இருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

# விமானப்பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். குடா நாட்டில் இருந்து வெளியிடங்களுக்கு விமானம் மூலம் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. இம்மாதம் 5 ஆம் திகதி வரை விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**தெல்லிப்பழை**

எஸ். செல்வராசா (108906 ஏ), பி. மயில்வாகனம் (111024ஏ), பி. ஜெயராம் (111719ஏ), ஜே. நிரோஜ் (111719பி), எஸ். ரஞ்சினி (112087ஏ), எஸ். தங்கச்சிப்பிள்ளை (112087பி), டபிள்யூ. வதனி (112194ஏ) டபிள்யூ. குயின்சி (112194 பி), மாணிக்கவாசகர் (112763ஏ), எம். எஸ். தேவி (112763பி). ஐ. கனகசபாபதி (112835ஏ) கே. சிறீகுமார் (112835 பி), எஸ். தெய்வேந்திரன் (112873ஏ), வீ. சுதன்சிரகொடி (112984ஏ), எஸ். சுதன்சிரக்கொடி(112984பி). எஸ். பவதாரணி (112984 சி), எஸ். தயாநிதி (113043 ஏ), எஸ். யசோதரன் (113249ஏ), எஸ். ராஜாம்பாள் (113249பி), எஸ். சதீபா (113249சி), எஸ் நீரஜன் (113249டீ), ஐ. சிறீரங்கநாதன் (114591ஏ).

பி. கதிர்காமநாதன் (114683ஏ), கே. பிரகாஷ் (114683பி), கே. அபிராமி (114683சி), பி. மீனாட்சி (114684ஏ), பி. மோகனராஜ் (114725ஏ). வி. சுந்தரலிங்கம் (114786ஏ), ரீ. குணசேகரம் (114936ஏ).

**கோப்பாய்**

கே. ராஜதுரை (101671 ஏ), ஆர். ஷாகெஸ்பெரி (101671 பி), கே. எஸ். நடராஜா (101742 ஏ), வீ. சரவணமுத்து (104053 ஏ), ஆர். மாணிக்கவாசகர் (107712 ஏ), எம். விஜயா (107712 பி), எம். இளங்கோவன் (107712 சி), எம். நந்தகோபன் (107712 டீ), ஏ.எஸ்.எம்.சேவியர் (109613 ஏ), டபிள்யூ. விமலதா (109613 பி).

பி. அருமைத்துரை 109774 ஏ), எல். அருமைத்துரை (109774 பி), எஸ்.திரௌபதி (110019ஏ), பீ. தவமலர் (110104 ஏ), பீ. தீதா (110104 பி), வீ. கணேசமூர்த்தி (110617 ஏ), ஜீ. துஷ்யந்தி (110167பி), சி. சங்கரப்பிள்ளை (110170 ஏ), பீ ரவீந்திரன் (110188 ஏ), ஆர். சதீஸ் (110188பி), ஆர். யாழினி (110188 சி) ஆர். ஆர். தர்மபாலன் (110190 ஏ), ரீ. தர்ஷன் (110190 பி) என். பொன்னையா (116199ஏ), ஆர். செல்லப்பா(110200ஏ), எஸ். சோதிப்பிள்ளை(110706 ஏ), எம். செல்லத்துரை (110745 ஏ), எஸ். எஸ். மாணிக்கம் (110785 ஏ), ஆர் பாலரட்ணசிங்கம் (110789 ஏ), பீ. சுரன், 110789), ரீ. வேலாயுதன் (110794ஏ).

ரீ. பாக்கியம் (110794பி), ரீ. நிரோஷன் (110794சி), ஆர். உருத்திரன் (110806ஏ), கே.. வீ. வேலுப்பிள்ளை (110809ஏ), எம். ஜயங்கன் (110815ஏ), எஸ் சிவகுமார் (110817ஏ), எம். செல்லம்மா (110822ஏ), எம்.யோகராஜ்(110822பி), கே. சிவசுப்பிரமணியம் (110826ஏ), பீ. சிவசுப்பிரமணியம் (110826பி), பீ. மனோன்மணி (110830ஏ). ரீ. அபிவாசகம் (110831 ஏ), ரீ. சுபாகரன் (110831 பி), எஸ். செந்தில்செல்வி (110838ஏ), ரீ முத்தையா (110843ஏ), கே. தங்கவேலு (110844ஏ), ரீ. புஸ்பராணி (110844பி), ரீ. நர்மதன் (110844சி), வீ. பொன்னையா (110845ஏ), ஜே. பாக்கியம் (110848ஏ), எஸ். நல்லைநாதன் (110849ஏ), எஸ். ரட்ணம் (110850ஏ). எஸ். ராஜேஸ்வரி (110855 ஏ), ரீ. தவரூபி (110856ஏ). பி. லெட்சுமி (110857ஏ), பி. எல். தாசன் (110857பி). எஸ். கோமதி (110858ஏ), எம். ஜெகசோதி (110863 ஏ), எஸ். நதி (110869ஏ). வீ. கோமதி (110872ஏ), வீ. பானுஜா (110872பி).

வீ. தொம்சன் (110872சி). எஸ்.சுமலதா (110885பி), எஸ்.குகப்பிரியா (110885சி), பீ.சீனியன் (110887ஏ), எம். சொர்ணவதி (110889ஏ), எம். தருஷா(110889பி), எல் பராராஜசிங்கம் (110891ஏ), ஏ.லெட்சுமரானந்தன் (110893ஏ), கே.பி.சுநாஜினி (111002ஏ), கே. ரஜனி (111002பி),எம்.ஜீவராஜன் (111005ஏ).

எஸ்.தங்கம்மா (111107ஏ), பீ. பாக்கியராஜ் (111007 பி), ஆர்.கனகசபே (111015 ஏ), கே. வெற்றிவேலாயுதம் (111019ஏ), வீ. சுதர்ஷனி (111019பி), வீ. சுகந்தினி (111019சி), ரீ. தைனளிபரசி (111020ஏ), ரீ. கௌசலா (111020பி), ரீ. கலையரசி (111020சி), எஸ்.சிறிஸ்கந்தராஜா (111021ஏ), என் செல்வராசா (111024ஏ).

என். அன்னலெட்சுமி (111031ஏ), ரீ. பொன்னுத்துரை (111035ஏ), பீ. ஜங்கரன்(111035சி), கே. ராசமணி(111066ஏ), கே. செலலத்துரை (111069ஏ), எஸ். லாளினி (111069பி), எஸ் கிருசா (111069சி), எஸ் ரஜீபன் (111069டீ), எஸ். ரெஜினா (111069ஈ), எஸ். வினுஷா(111069எல்).

எஸ். பமிசன் (111069ஜீ), எஸ். பபிராணி (111085ஏ), கே.ஜயாத்துரை (111115ஏ), ஐ. பிரசாந்(111115பி), கே. பாலரதன் (111124ஏ), கே. பாலமனாளன் (111124பி), எஸ் வேலாயுதம்(111131ஏ), ஜி. வேலாயுதம் (111131பி), ரீ. கமலபாதம் (111137ஏ), எச். அனிற்றா(111140ஏ), எச். ஜே. நிவேதா(111140 பி),எச்.பி.நிசாலிகா(111140 சி), எஸ். சர்வேஸ்வரன் (111170ஏ), ஏ. பொன்னையா (111198ஏ), எஸ். ரட்ணசிங்கம் (111201ஏ), ஆர். கபிலநந்தினி (111201 பி),எஸ்,சுதிர்த்தம்பி(111205 ஜீ. இந்திரகுமாக (116190ஏ), ஜீ ராகவன்(116190பி), ஆர். மகேஸ்வரன்(116301ஏ).

எம். பிரசாத் (116301பி), எம். ஏரம்பமூர்த்தி (116303 ஏ), ஜே.சிவரட்ணம்(116314 ஏ),ஏ.பரமநாதன்(116402ஏ), எஸ். செல்லத்துரை (116403 ஏ), வீ. கனகரட்ணம்(116407 சி). எஸ். கனகரட்ணம் (116407பி),ஜே.கனகரட்ணம் (116407சி), எஸ். கனகநிஸ்வரி (116606ஏ), எஸ் கே. சின்னத்தம்பி (116606பி), ரீ. தர்மசேகரம் (116608ஏ), ஆர். கமிர்ரா (116614ஏ), எஸ். முருகேசு (116649 ஏ), ரீ நளாயினி (116650 ஏ), சு. துரைராஜா (116650 பி), எஸ். புவனிங்கம் (116801 ஏ), பீ. சுதர்சனா (116801 பி), பீ. ஜனார்த்தனா (116801 சி), ஏ. தங்கவேலாயுதம் (116802 ஏ), எஸ். ரஞ்சிதலோசனி (116803 ஏ), பீ. சிவக்கொழுந்து (116809 ஏ), பி. பகீரதன்(116809பி).

# வடக்கு-கிழக்கு ஆசிரியர்கள் மீண்டும் போராட்டத்தில் குதிப்பர்!

## இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

திருமலைசெப்.16

அம்பாறை வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு அவர்களின் சேவைக்கால நிலுவைகள் முழுமையாக வழங்கப்பட்டது போன்று வடக்கு – கிழக்கின் ஏனைய பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் நிலுவைகள் முழுமையாக இம்மாதம் 30 ஆம் திகதிக்குள் வழங்கப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் ஒக்ரோபர் மாதத்தில் ஒரு நாள் அடையாளப் போராட்டத்திலும், அதனைத் தொடர்ந்து நவம்பர் இறுதிப் பகுதியில் தொடர் போராட்டத்திலும் நாம் குதிப்போம் — இப்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலர் த. மகாசிவம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் — 'நாம் எமது போராட்டத்தை ஜூலை 29 ஆம் திகதி நிறுத்திய போது ஆகஸ்ட் 30 ஆம் திகதிக்கு முன்னர் சம்பள நிலுவைகள் யாவும்முழுமையாக வடக்கு-கிழக்கில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் என அரச தரப்பில் உறுதி கூறப்பட்டது. ஆனால் இன்று வரை அது நிறைவேற்றப்படவில்லை,

மீண்டும் நாம் ஒரு மாத கால அவகாசத்தை அரசுக்கு வழங்குகிறோம்.செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன் முழுமையான சம்பள நிலுவைகள்வழங்கப்படவேண்டும்

1999ஆம் ஆண்டுக்குரிய இடர் காலக் கொடுப்பனவு தொடர்பான சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டபின்னர்நிதி போதவில்லை என்ற காரணத்தினால் இடை நிறுத்தப்பட்டது.

மேற்படி சுற்றறிக்கை மீண்டும் வெளியிடப்பட்டு திறைசேரியினால் உரிய நிதி வழங்கப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு ஆசிரியர்களை மீண்டும் வீதிக்கு கொண்டு வர முயற்சிக்க வேண்டாம் என மாகாண, மத்திய கல்வி நிர்வாகங்களை கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படித் தெரிவித்தார் (ஐ-ரி

## பரிசளிப்பு விழா

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற உள்ளது. [illegible] முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ-51)

# கைதாகிப் பிணையில் வந்தவர் மீண்டும் படையினரால் கைது

யாழ்ப்பாணம், செப்.16

அனுராதபுரம் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட இளைஞன் ஒருவர் மீண்டும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அரசடி வீதியில் வைத்து கடந்த 9 ஆம் திகதி இந்த இளைஞன் கைது செய்யப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ், அலுவலகத்தில்முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூத்த விநாயகர் வீதி, நல்லூரைச் சேர்ந்த சண்முகலிங்கம் ரமேஸ்குமார் (வயது 22) என்ற இளைஞனேகைது செய்யப்பட்டவராவார்.

ஏற்கனவே 98 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் அனுராதபுரம் நீதிமன்றத்தால் கடந்தமார்ச் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும்—

பின்னர் இவர் கடந்த ஜூலை மாதம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததாகவும்—

அனுராதபுரம் நீதிமன்றத்தில் இவருக்கான அடுத்த வழக்குத்தவணை எதிர்வரும் நவம்பர் 9 ஆம் திகதி ஆகும். அதற்கிடையில் அவர்மீண்டும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அந்தமுறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இவரைக் கைது செய்தமை தொடர்பாக பற்றுச்சீட்டும் இராணுவத்தினரால் உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

வாழ்த்துகின்றோம்

பரு. மாவட்ட நீதிமன்றில், (15-09-1999)
சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட
எமது நிலையத்தின் முன்னாள் தலைவர்
Dr. க. வேலும்மயிலும்
அவர்களை மனமார வாழ்த்துகின்றோம்.

பூமகள் சனசமூக நிலையம்,
கொற்றாவத்தை, பொலிகண்டி.

(69113)

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

♣ ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்புக்கள்.
♣ இவ்வகுப்புக்கள் 30 மணித்தியாலங்கள் நடைபெறும்.
♣ அச்சடித்த பாடக்குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஆரம்பம்: 18-09-99 (மாலை 2 மணி)

ஆசிரியர்,
அ. குமாரவேல்

புதிய உயர் கல்லூரி
ஆரிய குளச் சந்தி — யாழ்.

(69013)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலண்டன் சைவ மகாநாட்டிலே,
சிவத்தமிழ் சிறக்க உரையாற்றி,
எம் அன்னைக்குப் பெருமை சேர்த்த புனிதன்
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன்
அவர்களை
சித்தம் களி கூரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(69112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டன் கணக்காளர் பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 16
லண்டன் கணக்காளர் (சி. ஐ. எம். ஏ) பரீட்சைக்கான வகுப்புகள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எஸ் ஐ.ஏ.எஸ். நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குநர் கோ. விநாயகமூர்த்தி தலைமையில் இந்த வகுப்புக்கள் அண்மையில் யாழ். மத்திய கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் கே. இராஜதுரை சம்பிரதாயபூர்வமாக வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார்.

பிரதி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இந்த வகுப்புக்கள் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்று வருகின்றன.

(ஐ-3)

Chundikuli Girls' College
O.G.A.

Sale Fixed for 18-09-99, Postponed to 02-10-99. Due to Unavoidable Circumstances. Vouchers Purchased for 18-09-99 will be valid for the new date.

– Secretary

Chundikuli Girls' College,
Jaffna.
(69116)

# மகாஜனா நேற்று முதல் மீண்டும் பழைய இடத்தில்

## மாணவர்கள் பெருமளவில் சமூகம்

அளவெட்டி, செப். 16
தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மீண்டும் நேற்று முதல் பழையஇடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மூன்று பஸ்கள் பாடசாலை வரை சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

காங்கேசன்துறை வீதி வழியாக வந்த மாணவர்கள், ஆசிரியர்கள் தெல்லிப்பழைச் சந்தி சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரின் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

பாடசாலையின் மேற்குப் புறமிருந்து அம்பனைச் சந்தி ஊடாக சைக்கிள்கள், பஸ்களில் வந்த மாணவர்கள் பாடசாலை வரை செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

தெல்லிப்பழைச் சந்தி ஊடாக வரும் மாணவர்கள் தெல்லிப்பழை சோதனைச் சாவடியிலும்அம்பனைச் சந்தி ஊடாக வரும் மாணவர்கள் அம்பனைச் சோதனைச் சாவடியிலும் அடையாள அட்டைகளை ஒப்படைத்து விட்டுச் சென்றனர்.

நேற்று நடைபெற்ற பாடசாலை ஆரம்ப வைபவத்தில் இராணுவ உயர் அதிகாரிகள் தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்திருமதி றெஜீனா இருதயநாதன், தெல்லிப் பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சபையினர், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் திரு சு. ஸ்ரீபாஸ்கரன் பாடசாலை விஞ்ஞான கூடத்துக்குப் புதிய நுணுக்குக்காட்டிஒன்றைஅன்பளிப்பாக வழங்கினார்.

எதிர்பார்த்ததைவிட மாணவர்களும் ஆசிரியர்களும் பெருமளவிலே பாடசாலைக்கு சமுகம் அளித்திருந்தனர்.

(இ-13)

## வீதியின் ஒரு பகுதி திருத்தப்படவில்லை

வடமராட்சி, செப். 16
பருத்தித்துறை வல்லிபுரம் வீதியில் நெல்லண்டைக்கும் பல்லப்பைச் சந்திக்கும் இடைப்பட்ட சுமார் ஒரு மைல் வீதி இன்னமும் திருத்தப்படவில்லை.

திருத்தப்படாத இவ் வீதியின் மறுபக்க வீதிகள் ஏற்கனவே திருத்தப்பட்டுள்ள போதிலும் இடை நடுவிலுள்ள வீதி திருத்தப்படாமையினால் இவ் வீதியால் பயணம் செய்வோர் சிரமங்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.

[ஐ-173]

## பரிசளிப்பு விழா

வலிகாமம் தெற்கு,செப். 16
சுன்னாகம் மக்கள் வங்கியினரால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே அறிமுகப்படுத்தப்பட்ட மாணவர் மறுமலர்ச்சி சேமிப்புத் திட்டத்தின் கீழ் பரிசுபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் இந் நிகழ்வில் சுன்னாகம் மக்கள்வங்கி முகாமையாளர் திரு. ஆனந்தராசா வரவேற்புரை நிகழ்த்துவார்.

உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன், தெல்லிப் பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம், சட்டத்தரணி எஸ். பி. சிவஞானம், வடமாநில மக்கள்வங்கி முகாமையாளர் கே. திருநாவுக்கரசு யாழ்ப்பணப் பிராந்திய முகாமையாளர் எம்.கே. சிவபாதவிருதயம், உதவி பிராந்திய முகாமையாளர் கிங்ஸ்லி இராசநாயகம் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ள உள்ளனர்.

(ஐ-152)

## சிறுவனின் பரிதாப முடிவு

யாழ்ப்பாணம், செப். 16
தூக்குத் தராசுக் கயிற்றில் கழுத்தைக் கொடுத்து விளையாடிய பதினொரு வயதுச் சிறுவன் ஒருவர் கழுத்து இறுதி உயிரிழந்த பரிதாப சம்பவம் நேற்று அரியாலைப் பகுதியில் இடம்பெற்றது.

க. கஜேந்திரன் என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவரது சடலம் மரண விசாரணைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

சிறுவனின் சகோதரிக்கு இன்று பூப்புனித நீராட்டு வைபவத்துக்கு — ஒழுங்குகள் செய்யப்பட்டு— அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்திலேயே இத்துயரச் சம்பவம் இடம்பெற்றது.

(இ-139)

## வன்னிப் பகுதியில் திலீபன் நினைவு நாள்

மட்டக்களப்பு, செப். 16
திலீபனின் 12 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று இரவு 9.55 மணிக்கு இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வையொட்டி வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதி எங்கும் துப்புரவு செய்யப்பட்டு அலங்கரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முக்கியபொதுஇடங்கள்பாடசாலைகள், பொது நிறுவனங்கள், வீதிகள் தோறும் திலீபனின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-9)

## பத்திரிகையாளர் கைது தொடர்பாக

## ஊடகவியலாளர் ஒன்றியம் மனித உரிமை மீறல் மனு

கொழும்பு, செப். 16
'லேக்ஹவுஸ்' நிறுவனத்தின் பத்திரிகையாளர் சின்னையா கணேசன் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது தொடர்பாக இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

பத்திரிகையாளர் சி. கணேசன் ஓகஸ்ட் 16 ஆம் திகதி இடம்பெற்ற விபத்து ஒன்றில் காயமடைந்து சிகிச்சைபெற்ற பின்னர் வீட்டில் இருந்து வந்தார் என்றும்—

அந்தச்சமயம் சிலாபம் பொலீஸார் அவரைக் கைது செய்து தடுத்துவைத்துள்ளனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு அவரை சட்டவிரோதமாகக் கைதுசெய்து தடுத்துவைத்திருப்பது அடிப்படை மனித உரிமை மீறல் என்று தெரிவித்து இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் சட்டத்தரணி ரைனி கோடன் மூலம் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளது

இந்த மனித உரிமை மீறல் தொடர்பாக 2 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

(இ-6)

## மாணவரின் விவரம் பதிவு

'பாடசாலையிலிருந்து வேலை உலகிற்கு' எனும்கல்வியமைச்சின் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்துகொள்வதற்கு 1999 ஆம் [இவ்வாண்டு] ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய வடமராட்சிப் பகுதி மாணவர்கள் தத்தம் பாடசாலை அதிபர்களை நாளை வெள்ளி சந்தித்துப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தொழில் உணர்வு பற்றிய விழிப்புணர்ச்சியை உருவாக்குவதுடன் மாணவர்கள் தங்களுக்குப் பொருத்தமானதும், விருப்பமானதும், முறையானதுமான தொழில்களை தெரிந்துகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-173]

# மரண அறிவித்தல்கள்

## கணேஸ் கஜேந்திரன்

அரியாலை, மாம்பழம் சந்தி கராஜ் உரிமையாளர் கணேஸ் (அங்கிள்) அவர்களின் புதல்வன் கஜேந்திரன் நேற்று 15-9-99 அகாலமரணமானார்.

அன்னார் கணேஸ்- தனபாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும் நந்தினிதேவி, மகேந்திரன், கேமலதா, குகேந்திரன் (J.C.C), சிவதேவி (ஸ்ரீ பார்வதி வித்.), ரிசீபன் (J.C.C) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16-9-99 பிற்பகல் 3. 30 மணிக்கு(S.L.T.) 16, சின்னாலங்கண்டு வீதி, அரியாலை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
கணேஸ் (அங்கிள்)
(சி/8958)

மாம்பழம் சந்தி கராஜ்.

## ஆறுமுகம் சுப்பிரமணியம்

தன்னை களபூமி காரைநகரைச் சேர்ந்த விநாசித்தம்பி ஆறுமுகம் சுப்பிரமணியம் 14-09-99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை – அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, இராமநாதன் மற்றும் பார்வதிப்பிள்ளை, லட்சுமி, ரோகினிஅம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் லோகேஸ்வரன், விமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16-09-99) இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புவனேஸ்வரி
(மனைவி)
[69107]

தன்னை களபூமி,
காரைநகர்.

## செல்லத்துரை தெய்வேந்திரன்

(உதவிப் பணிப்பாளர், சமக்கோன் நிறுவனம்)

செல்லத்துரை தெய்வேந்திரன் 14-09-99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் செல்லத்துரை (கைதடி) திருமதி செல்லத்துரை ஆகியோரின் அருமை மகனும் யோகேந்திரன் (ஏயர் லங்கா), இந்திரமனோகரி (U. K.), தெய்வமனோகரி (U K). செல்வமனோகரி (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), மகேந்திரன் (U. K.), தபேந்திரன் (அமெரிக்கா), ஜெயமனோகரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரக்குமாரி (அமெரிக்கா), பாலசுப்பிரமணியம் (U.K.). இரத்தினசபாபதி (U.K.), றகு (RDA, யாழ்ப்பாணம்), சாமினி (U. K.), குக்கு (அமெரிக்கா), மோகன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் லலந்திக்கா, கார்த்திகா ஆகியோரின் சித்தப்பாவும் தஜீவனின் பெரியப்பாவும் றிசிக்கா, டசிக்கா, றேணுகா, பிரியங்கா, சரவணன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-09-99 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றகு
77, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

கொழும்பு முகவரி:-
51, வலுக்காராம றோட்,
கொழும்பு-3.
தொலைபேசி:- 575839
(69118)

# மரண அறிவித்தல்

## ஆரோக்கியம் பூகோணப்பர்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

நவாலி தெற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆரோக்கியம் பூகோணப்பர் 15-09-99 நேற்று காலமானார்.

அன்னார் பூமணியின் (முன்னாள் ஆசிரியை) அன்புக் கணவரும் ஜெபத்துரை, அலன் பூபாலசிங்கம் (ஆசிரியர்), அல்பேட் புஸ்பராஜா, மேரிசாரதா (ஆசிரியை. தலவாக்கொல்லை), பிறேமாவதி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(16-09-99) வியாழக்கிழமை நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிறேமாவதி யோகேந்திரன் (மகள்)
வி. யோகேந்திரன் (மருமகன்)
(பிரதேச தொலைத்தொடர்பு பொறியியலாளர்,
பொலன்னறுவை)
[சி/8957]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org